
www.tamilarangam.net

Raya

# மனிதம்

RAYA
87 RUE DE COLOMBES
[illegible]00 ASNIERES SUR -
FRANCE

மார்ச், ஏப் 90



4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


— கலாநேசன் —

# சண்டையும் சமாதானமும்

காலை வானத்தில்
பறந்து
கிராமத்தை விலைபேசும்
போர் விமானம்.
நிலத்தைக் குத்தி
குழி தோண்டும்
செல்கள்

உயிர் பறிக்கும்
சேதி வரும்
துப்பாக்கிச் சன்னத்துடன்.
மிக நெருங்கி
நெருப்புப் பொறி
கண்களில் தெறிக்கும்.

கிலி கொண்ட
மக்களின்
ஒலி அடங்கி
குருதிக் காடாய்
இருட்டுகின்ற
மாலைப் பொழுதில்
இரு தரப்பும் சமாதானம்.



www.tamilarangam.net

# மனிதம்!



நீண்ட பயணம் எனக்
குறுங்காலத் திட்டமிட்டும்
குறுகிய பயணங்களுக்கு
நெடுங்காலத் திட்டமுமாய்க்
குழம்பிய நாள் வேண்டாம்.
குழப்பிய நாள் வேண்டாம்.

நில்லாமல் செல்கின்ற
வரலாற்ற ஓட்டத்தின்
முனைப்பறிவோம்.

வா
சரியான கணக்கெடுப்பு.
அதன் பின்னர்
புது எழுப்பு.

-சேரன்-

மனிதம் வாசகர்களே!

மனிதம் நான்காவது இதழில் உங்களை சந்திக்கிறோம். வெளிவந்த மூன்று இதழ்களிலிருந்தும், அவற்றை நோக்கி வந்த விமர்சனங்கள் கருத்துக்களிலிருந்தும், அனுபவங்களிலிருந்தும் சில தேவைகளை "மனிதம்" உணர்ந்துள்ளது.

வெளிநாடுகளின் அகதிச் சூழலில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் எம்மவர் மத்தியில் விழிப்புணர்வையும், சமுகப் பொறுப்புணர்வையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் எமது பணியைத் தொடர முயற்சிக்கிறோம். அதேநேரம் சமுகப் பொறுப்பை உணர்ந்தவர்களுடனும், உணர முயற்சிக்கின்றவர்களுடனும், இத்தகைய கடமையை நோக்கி ஆர்வமுடன் வருகின்றவர்களுடனும், கருத்துப் பரிமாற்றங்களையும் ஆரோக்கியமான விவாதங்களையும் செய்வதன் மூலம் சரியான இலக்கை நோக்கியும் அதை அடைவதற்கான திசையை நோக்கியும் செல்ல முடியும் என்பதை நாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணர்கிறோம். அதற்கு சஞ்சிகைகள் நல்ல பாலமாக திகழ முடியும் என "மனிதம்" கருதுகிறது.

இந்நகைய தேவையையொட்டிய போக்கில் இங்கு இரண்டு விடயங்கள் எம்முன் எழுகின்றது. ஒன்று- குறிப்பான சுவிஸில் உள்ள நிலைமை மற்றையது- ஏனைய நாடுகளிலுள்ள நிலைமை. இங்குள்ள மக்களில் பெரும்பாலானவர் வேலை செய்கின்றவர்கள். உழைத்துக் களைப்புற்று வரும் அவர்கள் தமது ஓய்வு நேரங்களிலேயே பத்திரிகையை கையில் எடுப்பார்கள். அன்றாட நடைமுறை பிரச்சினைகள் தவிர்ந்த கடினமான, கருத்து ஆழமுள்ள ஆக்கங்களை இலகுவில் அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. ஆதலால் "மனிதம்" தனது ஆக்கங்கள் எளிமையானவையாக, விளக்கமானவையாக, உள்ளத்தை தொடுபவனவாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறையாக உள்ளது. ஆயினும் சமுதாய மாற்றத்தை நோக்கி ஆழமாகப் பார்க்கும் - ஆய்வு செய்ய முயலும் விடயங்களை வெளிக்கொண்டு வருவதையும் அவசியமான தேவையாகவே கருதுகிறது.

இந் நிலையில் ஏனைய நாடுகளில் தமிழ்மக்கள் சார்ந்த நிலைமைகளை கவனத்தில் எடுக்கும்போது சமூகப் பிரக்ஞை கொண்டவர்களினால் வெளியிடப்படும் சஞ்சிகைகள், அவற்றை வெளியிடும் சக்திகள் என்பவற்றின் வளர்ச்சியிலும் நாம் பங்குகொள்ள வேண்டியுள்ளது.

சில இலக்கிய படைப்பாளிகள், முற்போக்காளர்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மற்றும் சிந்தனைகள் - அவற்றில் எழுதும் ஆக்கதாரர்கள் யாவரும் பல்வேறு சமுதாயப் பிரச்சினைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் முழுமையான தீர்வைக் காண, அவற்றையிட்டு ஆய்வுகள், தேடல்களில் ஈடுபட முயற்சிப்பது ஆரோக்கியமான நிகழ்வே. ஆயினும் «ஆய்வு» «தேடல்» என்பதன் சரியான அர்த்தத்தைப் புரிந்துகொண்டு தத்துவத் தேடலில், சரியான அரசியல் கண்ணோட்டத்தைப் பெறுவதில் ஏற்படுவது குறைவாகவே உள்ளது. மேலும் கலை, இலக்கிய சிக்கல்களை அவற்றின் அடிப்படையை நோக்கி ஆய்வதன்மூலம் நாம் சரியான கண்ணோட்டம் பெறுவதுடன் நம் படைப்புக்களை உயிர்த்துடிப்புள்ளதாகவும், ஆற்றல்மிக்கதாகவும் மாற்ற முடியும்.

சமூகப் பிரச்சினைகளுக்கான 'தேடல்', 'ஆய்வு', என்பது சமூக மாற்றத்தை நோக்கியதாக அமைய வேண்டும். அவ்வாறாயின் நாம் தத்துவார்த்தப் பிரச்சினைகளில் கவனம் கொள்வது தவிர்க்க முடியாததாகிறது. கூடவே வாசகர்களும் இத்தகைய ஆக்கங்களை கடினமானது என ஒதுக்கிவிடாமல் அவற்றை வாசிப்பதன் மூலம் சமூகப் பிரச்சினைகளை புரிந்து கொள்ள முயற்சி எடுக்க வேண்டும்.

இத்தகைய ஆய்வுகளிலும், விவாதங்களிலும் முழுமையான கவனம் செலுத்துவதாயின் அதற்கு வேறோர் சிந்தனையின் அவசியம் எழுகிறது. அதுதான் சிறப்பானதாகவும் இருக்க முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதற்கான கால அவகாசமோ, கோரலோ இல்லாத நிலைமையும், சிவிலில் ஒழுங்கான வெகுஜனப் பத்திரிகை இல்லாத தன்மையும் கவனத்தில் எடுக்கப்படும் போது « மனிதம் » இத்தகைய (யதார்த்த) விடயங்களுக்கும் தனது பக்கங்களில் சிலவற்றை ஒதுக்க வேண்டிய தேவையை உணர்கிறது.

காலத்தின் தேவை கருதிய வகையில் இவ் இதழில் சில யதார்த்தப் பிரச்சினைகளைத் தொடும் ஆக்கங்கள் சில இடம்பெறுகின்றன. இக் கட்டுரைகள் சம்பந்தமான விமர்சனங்கள் கருத்துக்களை வெளியிலிருந்து எதிர்பார்ப்பதோடு, இவைபற்றியும், மனிதத்தின் நெகிழ்வு பற்றியும் வாசகர்களின் அபிப்பிராயங்களை எதிர் பார்க்கிறோம்.

இதில் சமூகப் பொறுப்புள்ள அனைத்து சஞ்சிகைகள், கலை இலக்கிய படைப்பாளிகள், ஆய்வாளர்கள் அனைவரும் தனித்தனியாகவும், நாம் ஆரம்பித்து வைத்துள்ள விவாதப் பகுதியினூடும் கலந்து கொள்ள முன்வருவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

கற்போம் !

விவாதிப்போம்! செயற்படுவோம் !

அட்டைப் படம் : நன்றி ► The Island (4.2.90)
இலங்கையின் 42 வது 'சுதந்திர' தினத்தை
ஒட்டிய ஒரு ஓவியனின் படைப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாகாண சபையும் — எழுகின்ற நிலைமைகளும்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின் தமிழ்ப் பிரதேசங்களில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் குண்டு வெடிப்புச் சத்தங்களும் நின்றுள்ளன. தமிழ் மக்கள் தொடர்ச்சியான ஒரு யுத்தச் சூழலிலிருந்து விடுபட்டு (தற்காலிகமாக) சற்று மூச்சு விடுகின்றனர். இந்திய இராணுவ வெளியேற்றம், இலங்கை அரசு - புலி பேச்சுவார்த்தை, புலிகளின் 'ஜனநாயக நீரோட்டம்' போன்ற நிகழ்வுகளே இன்றைய 'அமைதி' நிலைக்கு காரணமாகும்.

இந்தியப் படைகளின் படிப்படியான வெளியேற்றத்துடன் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளையே பலரும் உன்னிப்பாகக் கவனிக்கின்றனர். தமிழ் ஈழக் கோரிக்கை எழுவதற்கு காரணமாக இருந்த சகல அடிப்படைப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க இலங்கை அரசு தயாராக உள்ளதாக ஜனாதிபதி தங்களுக்கு உறுதியளித்துள்ளதாகவும், இதன் அடிப்படையில் ஜனாதிபதி மேல் தங்களுக்கு பூரண நம்பிக்கை உண்டென்றும் புலிகள் (விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி) கூட்டங்களில் அதன் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

இப் பேச்சுவார்த்தைகளின்போது, « இலங்கை அரசு மீண்டும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் » என்ற அச்சம் தற்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது பற்றி

www.tamilarangam.net



புலிகள் சார்பில் எடுத்துரைக்கப் பட்டது. இதற்குப் பதிலளித்த ஜனாதிபதியார் இலங்கை அரசிற்கு இராணுவ நடவடிக்கைகளில் நம்பிக்கை இல்லை எனவும், கடந்த காலங்களைப் போல் இராணுவ நடவடிக்கைகளில் இறங்கமாட்டோம் எனவும் வாக்குறுதிகளை உதிர்த்துள்ளார்.

இதுவரையில் நடந்த இலங்கை அரசு- புலிகள் இடையிலான பேச்சுக்களின் முழு விபரங்களையும் இப்போ வெளியிடுவது பொருத்தமானதல்ல என அன்ரன் பாலசிங்கம் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்திய இராணுவம் வெளியேறிய பின் புதிய மாகாண அமைப்பு ஒன்றை ஏற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என மாத்தயா கூறியுள்ளார். ஜனாதிபதியோ வழமையான பாணியில் ஐக்கிய இலங்கை, சகல சமூகத்திற்கும் சம உரிமை, சமூக முன்னேற்றம் என்பனவே தனது குறிக்கோள் என பல்லவி பாடுகிறார். ஆக, தற்போதைய மாகாண சபையை எப்படி கலைப்பது, தேர்தலை நடத்துவது, புதிய மாகாண சபையை தோற்றுவிப்பது - இதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பதுதான் இப்போ பிரச்சினை!

> தமிழ் மக்களின் பிரச்சினைகளின் அடிப்படைகளை வேரோடு புரட்டுவதை விடுத்து அதன் பிரதிபலிப்புகளுக்கு வைத்தியம் பார்ப்பது நெருக்கடிகளை ஒத்திப்போடுவதாக அமையுமேயொழிய அதனைத் தீர்ப்பது என்பதாகிவிடாது.

www.tamilarangam.net



இன்னொரு புறம் EPRLF (மார்ச் முதலாம் திகதி யிலிருந்து) தமிழீழத்தை 'பிரகடனம்' செய்திருக்கிறது. இந்த அறிவிப்பு கேலிக்குரியதாகத் தோன்றினாலும் இதன் பின்னணி பற்றித் தெரியவில்லை. நமது (19 அம்ச) கோரிக்கைகளை இலங்கை அரசு இன்னும் ஒரு வருட காலத்துள் தீர்த்து வைத்தால் தாம் இம் முடிவுபற்றி மீள்பரிசீலனை செய்வதாகவும் அறிவித்துள்ளது. மாகாண சபையை இழக்கவும் ஒட்டியிருக்கவும், மாகாணசபையை பிடிக்கவும், பதவிகள் பேரங்களுக்கும் தமிழீழ கோரிக்கை விடுதலை இயக்கங்களுக்கு பகடைக்காய் ஆகிவிட்டது.

இது ஒருபுறமிருக்க புலிகள் உட்பட சகல தமிழ்க் குழுக்களையும் சந்தித்துப் பேசுவதில் கருணாநிதி தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளார். மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்கவேண்டும் என்ற பிடியிலிருந்து மாகாண சபையைக் கலைத்து தேர்தலை நடத்த வேண்டும் என பிடியை மாற்றிக்கொண்டு விட்டார் கருணாநிதி. இங்கு பேசுவது கருணாநிதி அல்ல; இந்திய அரசின் குரல்தான்!

இந்தியா இலங்கை அரசுடன் ஒரு 'நட்புறவு' ஒப்பந்தத்துக்கு வரத் தயங்குகிறது. இது முடியாமல் போகும் பட்சத்தில் நமது மேலாதிக்க நிலையை தக்க வைப்பதில் முடமாக்கப்பட்ட EP குழுக்களால் முடியாமல் போகலாம் என்ற சந்தேகம் இந்திய அரசை சிக்கலத்தில் மாட்டியுள்ளது. இதேநேரம் இலங்கை

www.tamilarangam.net



அரசும் மாகாணசபையை கலைத்து தேர்தலை நடத்த வழிவகைகளைத் தேடுகிறது. இதனிடையே சில குழுக்களும் மார்ச் முதலாம் திகதிக்குள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்று சிறுபிள்ளைத்தனமான அறிவிப்பை விடுத்தது. புலிகள் பகிரங்கமாகவே மறுப்புத் தெரிவித்தனர். பின்னர் ரஞ்சன் குரலை மாற்றிக்கொண்டு புலிகளுக்கு விதிவிலக்கு அளிப்பதாகக் கூறினார். மார்ச் முதலாம் திகதியும் ஆயுதம் எதுவும் கிடைக்காமல் போய்ச்சேர்ந்தது. இவ்வாறு இலங்கை அரசு ஜனநாயக வேடத்துடன் நிறுவிய மாகாணசபையை இதே முகத்துடன் நின்று எப்படி கலைப்பது, தேர்தலை நடத்துவது என தடுமாறி நிற்கிறது.

இதேவேளை இலங்கை அரசு - புலிகள் இடையிலான இராணுவ மோதல் மீண்டும் வெள்க்கிளம்பலாம் என்ற அச்சம் தற்போது தமிழ் மக்கள் மத்தியில் இயல்பாகவே காணப்படுகிறது. இந்த எதிர்பார்ப்பு பலமானதாக உள்ள அதேவேளை இந்தக் கட்டத்துக்கிடையிலேயே வேறுவேறான நிலைமைகள் நெருக்கடிகள் தோன்றும் வாய்ப்பும் உள்ளது.

.o - o.

- பாலமோகன்.

புதிய குழப்பங்கள், இன வாதத்தின் தோற்றம் ஆகிய கட்டுரைகள் அடுத்த இதழில் தொடரும்.

• ஆ-ர் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுவிஸ்:

# சிறுவர் பாடசாலையில் தமிழ் பிஞ்சுகளின் வேதனை

குழந்தை பராமரிப்பு நிலையங்களிலும் சிறுவர் பாடசாலைகளிலும் எமது மழலைகள் படும் துயரம் தமிழ்மக்கள் அனைவரது கவனத்தையும் இப்போது மெல்ல மெல்ல ஈர்க்கத் தொடங்கியுள்ளது.

அண்மைக்காலத்தில் அதிக தமிழ்க் குழந்தைகள் சுவிஸ்க் குழந்தைகளுடன் சேர்ந்து படிக்கவிடப்பட்டுள்ளதை அனைவரும் அறிவோம். தொழில்புரிய வேண்டி நாம் எமது குழந்தைகளை தவிர்க்கமுடியாத நிலையில் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் விட்டுவிட்டு வேலைக்குச் செல்கின்றோம் . பணத்திற்காக பெற்றோரைப் பிரிந்து ஆயாவிடம் சுவிஸ் முறையில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் எம் மழலைச் செல்வங்களுக்கு ஏற்படுத்தப்படுகிறது. ஓய்வு நேரங்களில் தாய்ப் பாசையையும் ஏனைய நேரங்களில் "ஆயாப்பாசையையும்" -கள்ளமில்லா அன்பை, கன்னித் தமிழ்ப்பண்பை கலந்துணவாய் நாமதற்கு ஊட்டிடவேண்டும்- என்பதற்கிணங்க ஊட்டுகிறோம்.

எம்மைப் பொறுத்தவரையில் எமது குழந்தைகள் இரண்டு மொழிகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவார்கள், பெறுகிறார்கள் அல்லது பெற்றுவிட்டார்கள். இரண்டு வேறுபட்ட கலாச்சாரமும் அவர்களுக்குத் தண்ணி பட்டபாடு.

ஆனால் உண்மை நிலை என்ன ?
தமிழ் குழந்தைகள் மற்றைய குழந்தைகளால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்களா ?
இரண்டு மொழிகளில் ஒன்றையாவது ஒழுங்காகக் கதைக்கிறார்களா ?
இரு வேறுபட்ட கலாச்சாரங்களை உண்மையில் பழகிவிடுவார்களா ?
**இவற்றிற்கு விடைகாண முற்படும் போதுதான் எமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது !**

ஏனைய குழந்தைகள் எமது குழந்தைகளை ஒதுக்கியே வைக்கின்றார்கள். குழந்தைகள் இலகுவாகச் சேர்ந்துவிடுவார்கள் என்பது எந்தளவுக்கு உண்மையோ அதேயளவு உண்மை குழந்தைகள் இலகுவாக விலகிவிடுவார்கள் என்பதும். எமது வீட்டில் முற்றிலும் மாறுபட்ட சூழலையும் பழக்க வழக்கங்களையும் காணும் எமது குழந்தைகள், விடிந்ததும் வேற்று உலகில் தனிமையாக விடப்படுகின்றார்கள்.

வளர்ந்தவர்களால், வந்த புதிதில் உணரப்பட்ட அதே தனிமையும் வேற்றுமையும் !!
நாம் அதை சகித்துக்கொண்டோம் ..... சமாளித்துக்கொண்டோம்......
ஆனால் எம் குழந்தைகள் ....................................

www.tamilarangam.net



ஆயாவை தன்பக்கம் இழுக்க தம்சக்திக்கு எட்டியபடி முயற்சிக்கிறார்கள். சம்பளம் பெறும் ஆயாவோ மற்றைய குழந்தைகளையும் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளார் இதனால் எமது குழந்தையின் விரக்தி ஏனைய குழந்தைகள் பக்கம் திரும்புகிறது...

முடிவு ? புத்தகக்கிழிப்பு .... பொம்மைபறிப்பு.... குழந்தைத்தனம்........

ஆயாவின் முறைப்பாடு.... அது.. இது..

பெற்றோராகிய நாம் கூறுகிறோம் குழந்தைகள் என்றால் அப்படித்தானே என்று. பராமரிப்பாளர்கள் கூறுகிறார்கள் எமது குழந்தைகள் சேர்ந்துபோகிறார்களில்லை விட்டுக்கொடுக்க மறுக்கிறார்கள் எனவே இக்குழந்தைகளுக்கு "விசேடவகுப்புக்கள் மூலம் உதவியளிக்கப்பட வேண்டும் " என்று. அதாவது எமது குழந்தைகளின் உளவிருத்திக்கு, அமைதியற்ற தன்மையைப் போக்குவதற்கு, உதவி பெற SOZIAL-PAEDAGOGISCHER DIENST DER SCHULEN எனும் சிறுவர் உளவியல் நிபுனர் நிறுவனத்தில் "உதவி" கோரப்படுகிறது. வழமை போல பராமரிப்பு நிலையத்திற்கு செல்லும் குழந்தை கிழமையில் ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் உளவியளா--ளரின் பயிற்சிக்கு உள்ளாக்கப்படுவார்கள். பெற்றோர் இதற்கு செலவு செய்ய வேண்டியதில்லை அரசங்கமே பொறுப்பு என்பதால் கவலையும் இல்லை.

ஆனால் எமது குழந்தைகள் மனநோயாளராக ஆக்கப்படுகிறார்கள் !!!!!

இதற்குப் பொறுப்பாளர் யார் ? பெற்றோராகிய நாங்கள் தான் !!

எமது வசதிக்கும் வாழ்வுக்குமாக ஒருபாவமும் அறியாத எமது குழந்தைகளின் எதிர் காலத்தையே நாசமாக்குகின்றோம். எம்மைப்பொறுத்த வரையில் சூன்யமான எதிர்காலம். எமக்கு எங்கே விடிவு அல்லது எமது நாடோடித்தனத்திற்கு எங்கே முடிவு எனத்தீர்மானிக்க தயங்குகின்றோம். எமது தாயகம் தான் எமக்குப்போக்கிடம் என்பதை ஏற்க ஏனோ தயங்குகின்றோம்.

இதனால் எமது குழந்தைகளுக்கு தமிழை படிப்பிக்காமலேயே விட்டுவிடுகிறோம் எமக்கு அல்லது எமது பிள்ளைகளுக்கு சுவிஸ் தான் எதிர்காலம் என ஏனோ எம்மையறியாமலேயே எண்ணிக்கொண்டு, பிள்ளைகளின் எதிர்காலம் " டொச் " Deutsch ல் தான் என்று குழந்தை பராமரிப்பு நிலையத்திற்கு அவர்களை அனுப்பி எமது கடமையை பூர்த்தி செய்ய முனைகிறோம். அவர்கள் அரைகுறையாய் அந்தப்பாசை கதைக்கும் போது " பிடிச்சிடுங்கள் எங்கடையள் " என்று பெருமைப் படுகின்றோம். அத்துடன் விடாமல் எமக்கு தெரிந்த கொச்சைப் பாசையையும் திணித்து விடுகின்றோம்.

இது எமது அடுத்த மடமைத்தனம்

இங்குள்ள பராமரிப்பு நிலையங்களோ ( Tagesheim ) சிறுவர் பாடசாலைகளோ (Kinder-Garten) குழந்தைகளுக்கு மொழி படிப்பிப்பதில்லை என்ற விடயம் பல பெற்றோருக்குத் தெரிவதில்லை. பராமரிப்பு நிலையத்தில் பெற்றோரை பிரிந்த பிள்ளைகள் பராமரிக்க படுவதுடன் அடுத்த வருடம் சிறுவர் பாடசாலைக்கு போகவிருக்கும் பிள்ளைகளை அதற்கு தயார் செய்கிறார்கள்.

(தொடர்ச்சி 30ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தப்பியது போதும்

காலம்
பதில் சொல்லும்
இது பலரது
தப்பித்தல் !

நாம்
அன்றிலிருந்து
இன்றுவரை
தப்பித்துக் கொண்டே
இருக்கிறோம் .

எமது
தப்புதல்கள்
எம்மை
பாதுக்கின்ற
அதே வேளை
எமது
சந்ததியை
தடுக்கி விழ
வைக்கின்ற
சாவுக்குழிகள் !

இந்தப் பரம்பரை
தப்பியது போதும்.....
அடுத்த சந்ததிக்காக
தப்புதல்களை
சற்று
நிறுத்துவோம்.
இல்லையேல்
வருங்கால சந்ததி
தப்பவே மாட்டாது.

இன்றே
இப்போதே
நாளைய
நமது
சந்ததிக்காக
நன்மைகளைப்
தேடப் புறப்படுவோம் !

சுதந்திரத்தை
சுதந்திரமாக
அவர்களாவது
சுவாசிக்கட்டும் !

- பாமினி -

www.tamilarangam.net



# ஜனநாயகத்திற்கு தடை ?

அண்மையில் "கனடாவில்" இருந்து ஓர் செய்தி எட்டியது அங்கு வெளியாகும் "செய்திகள்" "தாயகம்" எனும் பத்திரிகை புலிகளின் ஆதரவாளர்களால் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கை கலப்பு சம்பவமும் இடம் பெற்றுள்ளது. ஆனால் 'தாயகம்' மக்கள் மத்தியில் ஆதரவை பெற்று தொடர்ந்து வெளி வருகிறது

நாட்டில் கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தில் வைக்கப்பட்டுள்ள கைகள் வெளிநாடுகளில் நீளத் தொடங்கியுள்ளதின் வெளிப்பாடுதான் இந்நிகழ்வு இதனை ஒரு தனிப்பட்ட செய்தியாக நோக்காமல் தொடரும் ஒரு போக்கின் வெளிப்பாடு என்ற அடிப்படையில் பார்ப்பது அவசியமாகும்

நமது பிரதேசத்தில் காலடி வைத்த அமைதிப்படை தமிழ் மக்களுக்கு தனது கோர முகத்தை காட்டத் தொடங்கியவுடன் முதன்முதலில் செய்த. நடவடிக்கை 'முரசொலி', 'ஈழமுரசு' பத்திரிகைகளை தடை செய்தமையே. இதேபோல் E.PRLF அண்மைக் காலத்தில் "ஈழநாடு" பத்திரிகையை தடை செய்து அதன் அச்சு இயந்திரங்களையும் கொள்ளையடித்துச் சென்று "விடுதலை" என்ற தினசரிப் பத்திரிகையை கொண்டு வந்த போது, புலிகளால் அப்பத்திரிகை தடை செய்யப்பட்டதுடன் வாசிப்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. அதுபோல்

www.tamilarangam.net



பல்கலைக்கழக பேராசிரியை ராஜினி திராணகம இயக்கங்கள், இந்திய இராணுவம், மற்றும் அரசியல் பிரச்னைகளை விமர்சன ரீதியில் ஆய்வு செய்து வெளியிட்டமைக்காக படுகொலை செய்யப்பட்டார்

இன்று நம் தேசத்தில் முற்று முழுதாக ஜனநாயகம் என்பதே இல்லாத சூழ் நிலையில் மக்களோ, வெகுஜன ஸ்தாபனங்களோ, தன் கல்வியின் உயர்பீடமான பல்கலைக்கழகமோ தமது கருத்துக்களை வெளிப்படையாக வைக்க முடியாத நிலையில் வெளிநாடுகளில் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களில் பலர் அந் நாடுகளில் உள்ள ஜனநாயக சூழலைப் பயன்படுத்தி குழுக்களாகவோ, தனி நபர்களாகவோ தமது கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தனர்

ஆரம்ப காலங்களில் வெளிநாடுகளில் இயக்கக் கிளைகளினால் வெறும் பிரச்சார ஒருபக்கச் சார்பான கருத்துக்களை மட்டும் தாங்கி அந்த வெளியீடுகள் போராட்டத்தின் தேக்கத்தை தொடர்ந்து நின்று விட, சில காலத்தின் பின் இயக்கச் சார்பற்ற தனித்துவங்களைப் பேணிக் கொண்டு சுதந்திரமான விவாதங்களுக்கு வழி சமைக்க கூடிய சில வெளியீடுகள் வர ஆரம்பித்தன இத்தகைய ஆரோக்கியமான நிலைக்கு ஆபத்து என்பது ஜனநாயக சக்திகள் ஒவ்வொருவரும் அக்கறை கொள்ள வேண்டிய விடயமாகும் இயக்கங்களோ, அல்லது குழுக்களோ தமக்கு சார்பான பத்திரிகைகள் சஞ்

(தொடர்ச்சி 23 ம் பக்கம்)

www.tamilarangam.net



# போராட்டமும் மாணவர் நிலையும்

கல்வி கற்கவேண்டிய பருவத்தில் ஜேர்மனியில் வந்து அகதியாகியிருக்கும் எமது நாட்டை சேர்ந்த மாணவர் ஒருவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை சில திருத்தங்களுடன் இங்கு இடம்பெறுகிறது.

இக்கட்டுரை J.V.P. தலைவர்கள் அரசினால் அழிக்கப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்

உலக நாடுகளுடன் இலங்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது பௌதிக பண்புச் சுட்டெண்ணினால் குறைந்து காணப்பட்டாலும், எழுத்தறிவு 81% திற்கு அதிகமாக உயர்ந்து இருக்கிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலங்கையும் அடங்கும். இந்தக் கணிப்பீடுகள் யாவற்றையும் காலப் போக்கில் சரியான முறையில் கணக்கில் எடுக்க முடியாமல் போய் விட்டது. இதற்கு காரணம் பதவியேற்ற இனவாதக் கட்சிகளினால் ஏற்பட்ட விளைவுதான். மேலும் ஆட்சிக்கு வந்த இனவாதக் கட்சியினர், சிறுபான்மை இனத்தின் உரிமைகளை நசுக்கி வந்தனர் அத்துடன் பேரினவாத அரசு பல புதிய சட்டங்களை அமுலாக்கியது. இவ்வரசு 1972ம் ஆண்டு தரப்படுத்தல் என்ற சட்ட மூலத்தினை அமுலாக்கியது. இச்சட்ட மூலத்தினால் பல நடுத்தர வர்க்க தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். மேலும் நசுக்கப்பட்ட உரிமைகளை மீட்பதற்கு பல விடுதலை

www.tamilarangam.net



அமைப்புக்கள் உருவாகின. இனவாத அரசு விடுதலை அமைப்புக்களை ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு சிறுபான்மை இனத்தின் மீது இனவெறி இராணுவத் தாக்குதலைத் தொடுத்தது. இவ் இராணுவத் தாக்குதலை எதிர் நோக்கும் அளவிற்கு விடுதலை அமைப்புக்கள் வலிமை பெற்றனர். இக்கால கட்டத்தில் பல தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் துறந்து விடுதலைப் போராட்டத்தில் தம்மையும் இணைத்துக்கொண்டனர் எனினும் போராட்டத்திற்கென போடப்பட்ட அத்திவாரம் தவறானதை உறுதியற்றது. காரணம் இன்றைய இளைய தலைமுறையின் எதிர் காலம் தாய் நாட்டை நல்ல வழி நடத்த வேண்டியது போராட்டக் குழுக்களின் கடமை. இதை விட்டு விட்டு வெறும் ஆயுத மனிதனாக காட்சி அளித்தால் நிலைத்து நிற்க முடியாது. இது எம்மவர் எமது நாட்டுக்கு செய்த துரோகம். இது ஒரு புறம் இருக்க மறுபுறம் அரசின் இராணுவ நடவடிக்கைகளினாலும் எமது மாணவ சமுதாயம் பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டது. இந்தக் காலப் பகுதியில் இயக்கங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் யாழ் பல்கலைக்கழகத்தில் 1986ல் மாணவர் மீது ஏவப்பட்ட முதல் கொலைக்கு வரித்த பீட மாணவன் விஜிதரன் கடப்பட்டான். இதற்கு முன்னரும் இதற்குப் பின்னரும் காணாமல் போன மாணவர்களின் தொகை எண்ணற்றது. அன்று விஜிதரனுக்கு நடந்த கோரமான க்கி செயலை மாணவர்கள் எல்லோரும் எதிர்த்தனர். அது மாத்திரமல்ல எரிமலையாக வெடித்தனர். ஆனால் மாணவர் சக்தி மாபெரும் சக்தி என்ற நியதியை கொ தீகைப் பருக்கி விட்டனர். என்று எழுந்த மாணவ எதி

www.tamilarangam.net



ரிப்பு நடவடிக்கை யாவும் உண்மையான உணர்வுடன் எடுக்கப்பட்டாலும், அதன் பின்னணியை புரியாது நடந்து விட்டனர். இந்தச் செயலை செய்த விரோதிகளினால் இன்றும் மாணவ சமுதாயத்திற்கு மரண தூது விடப்படுகிறது. மாணவர் போராட்டம் நசுங்கடிக்கப்பட்டதால் மாணவர் கொலை தொடர்ந்தே செல்கிறது. அன்று விஜிதரன், அதன் பின் விமலேஸ்வரன் என்ற மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், இது மாத்திரமல்ல விரிவுரையாளர்கள் மிரட்டப்பட்டார்கள். இத்தனை வேதனை, சோதனைக்கு மத்தியில் யாழ் பல்கலைக்கழகம் தொடர்ந்து செயல் படுகிறது. ஆனால் மாணவர் மீது நடாத்தப்படும் வேடிக்கையான வெறித்தனங்கள் இன்னும் ஓயவில்லை.

இது இவ்வாறிருக்க ஜெயவர்த்தனாவின். U N.P. ஆட்சிக் காலத்தில் அரசியல் கட்சியாக இருந்த J.V.P. 1983ம் ஆண்டு தடை செய்யப்பட்டது. அன்றுமுதல் மறைமுகமாக இருந்தது யாவருமே அறிந்ததே. இதன் பின்னர் ஜெயவர்த்தனாவினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தமும் இந்திய இராணுவ வருகையும் சிங்கள மக்களை அரசின் மீது விரக்தி அடையச் செய்தது. இந்த வேளையில் J.V.P தீவிரமாக வளர்ச்சி அடைந்தது. இன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இந்த தீவிரவாதக் குழு மறைமுகமாக இருந்த போது மாணவர் மீது தனது வெறித்தனமான கொலையை மறைமுகமாக செய்தது. இந்தக் கொலைச்சம்பவத்தில் இதில் அகப்பட்ட சுதந்திர மாணவர் அமைப்பின்

www.tamilarangam.net



மாணவன் தயாபார்த்தினா 1986ம் ஆண்டு கொல்லப்பட்டா ன். அத்துடன் J.V.P நிறுத்தி விடவில்லை இன்று தனது தீவிர தாக்குதலினாலும், இந்திய எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் ஒரு வருடத்திற்கு மேல் தெ ன்னிலங்கை பல்கலைக்கழகங்களான மொறட்டுவை, பேரா தனை, கொழும்பு களனி (வித்தியாலங்கார) தொடர்ந்து இ யங்காத நிலையும், பள்ளிக் கூடங்கள் தொடர்ந்து நடத்த முடியாத நிலையிலும் இருந்தது. இச்செயல்களை தனது நடவடிக்கைக்கு பெரிதாக பயன் படுத்தி தனது வெற்றியை நினைத்து மார்பு தட்டுகிறது.

ஆனால் இவர்களுடைய நடவடிக்கைகள் எதிர்கால சமுதாயத்தை பாதிக்கிறது என்பதை மறந்து விட்டார்கள் போலும். அல்லது மாண வரை பயன் படுத்தி தங்கள் நடவடிக்கைகளை இலகு வில் மேற் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் நடத்தி னார்களோ தெரியாது? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மறுபுறம் அரசாங்கம் தீவிரவாதிகளை அட க்குவதாக கூறி தனது குழுக்களான 'பிரா', 'பச்சைப்புலி' போன்றவற்றின் உதவியுடன் மாணவர்களை கொன்று குவிக்கிறது. இதன் உண்மையை உணர்த்தின களனி யாறு கண்டிப்பாதைகள், சிறைக் கூடங்கள். இவை யாவ றையும் இனம் தெரியாதோர்களால் செய்யப்பட்ட கொலை- கள் என்று கூறி விடுகிறார்கள். இன்று தென்னிலங்கை யில் நடக்கும் தவறான போராட்டச் செயல்கள் தனியாக சிங்கள மாணவரை மாத்திரமல்ல தமிழ் மாணவர்களை

www.tamilarangam.net



யும் பாதித்துள்ளது கண்கூடு. இங்கு ஒன்றை தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும், போராட்டத்தை நிராகரிப்பது இக் கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக எந்த மக்களுக்காக போராட்டத்தை மேற்கொள்வதாக போராட்ட அமைப்புகள் கூறிக் கொள்கின்றனவோ மக்களை பிழையான வழிக்கு வழி நடத்துவதை நிராகரிக்கிறது. போராட்ட அமைப்புகள் விடும் தவறுகள் யாவும் மக்களின் எதிர் காலத்தையே பாதிக்கிறது. ஏன் மக்களுக்குள் உள்ள மாணவ சமுதாயத்தையே பின்னோக்கி நடத்திச் செல்கிறது.

அன்னிய இராணுவம் அடியெடுத்து வைத்த நாள் முதல் எமது மாணவர்களது கல்வி பாதிப்பு அடைந்தது. மாத்திரமல்ல மாணவ சமுதாயத்தினது எதிர் காலமே அழிந்து போகும் நிலை கூட ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம் எமது இனத்தைச் சேர்ந்தோர் விட்ட தவறுகள். இக்கால கட்டத்தில் மாணவர் மீது நடந்த பாசிச கொலைகளை கொடுமைகளை தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டியது எமது பொறுப்பு. அன்னியரின் வருகையை அண்டிய பகுதிகளில் போராட்டக் குழுக்கள் இடையே ஏற்பட்டு வந்த கருத்து மோதல் காரணங்களினால் பல மாணவர்களுடைய கொலைகள் உரிமை கோரப்படாமலும், சரியான காரணம் காட்டப் படாமலும், ஆள் தெரியாத நபர் என்ற பெயரில் தொடர்ந்து நடக்கிறது. இந்த மனிதாபமற்ற கொலைக்குள் அடங்கிய மாணவரின் எண்ணிக்கை எண்ணற்றது. இதன் பின்னர் அன்னியர்களாலும் கைக்கூலிகளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னாலும் மாணவர்கள் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர், புத்தி ஜீவிகள் கொலை செய்யப்பட்டனர். இந்த செயல்களினால் 1989ம் ஆண்டு யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீட இரு மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்த வேளையில் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதன் பின்னர் நடந்த மாகாண சபை தேர்தலின் பின் ஏற்பட்ட கிடைக்காத தீர்வினால் பதவியேற்ற அதிகார வெறிபிடித்தவர்களாலும், தாங்கள் ஜனநாயக வாதிகள் என்று கூறிக் கொள்ளும் மக்கள் விரோதிகளினாலும், அன்னிய இராணுவத்தினராலும், ஏற்பட்ட விளைவுகளினால் மாணவ சமுதாயத்தின் கல்விக்குழி பறிக்கப்பட்டு கட்டாய பயிற்சி என்ற நிலைக்கு தள்ளப்பட்டு திகைத்து நிற்கிறது எமது மாணவ சமுதாயம். இந்த கட்டாயப் பயிற்சிக்கு இந்திய இராணுவத்தின் ஆணை விரித்து பிடிக்க முன்நின்ற ஏஜெண்டுகளின் வரலாற்று சாதனைகளைக் கூட எதிர்கால வரலாறு நிச்சயம் பாடம் படிப்பிக்கும். அத்துடன் மாணவர்களின் அறைகூவலின் மூலம் வழி பிறக்கும். இன்று கட்டாயப் பயிற்சிக்கு செல்கின்ற மாணவர்கள் அனைவருமே குழுக்களின் மோதல்களினால் அநியாயமாக இழப்பை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். குழுக்களின் பதவிப் போட்டியால் உருவாகிய மோதல் இன்று உருக்குலைய வைத்துள்ளது எமது மாணவ சமுதாயத்தை.

இந்தக் கொடுமைகளை பேசினால் நெற்றியில் பொட்டு வைப்பார்கள் இவ

www.tamilarangam.net



டால் காதில் பூ வைப்பார்கள். இன்னும் சிலரோ இன்றைய நிலையில் சோர்வுக்கு வழி பாடங்கள் என்று இழிவாக கூறுவார்கள். இவை யாவற்றையும் அரசியல் தத்துவம் என்று தங்களுக்குள்ளேயே நினைத்து சந்தோசப் படுவார்கள்.

இவற்றின் விளைவுகளினால், படிப்புகளை நிறுத்தி பாதுகாப்பை தேடிக் கொள்வதற்காக சிங்களப் பிரதேசங்களில் தமிழ் மாணவர்கள் தங்கியுள்ளார்கள். இதை சாதகமாக பயன் படுத்தி சர்வ தேச அரங்கில் சத்தம் போடுகிறார்கள், இலங்கை அரசும் ஜனநாயகம் என்று கூவல் இடும் போலிக்கும்பல்களும். இவர்கள் எல்லோருடைய துரோகங்களினால் துடிக்கும் மாணவ சமுதாயத்தின் எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டியது. மாணவராகிய எங்கள் கடமையாகும்.

நிகழ்ந்து கொண்டிருக்கும் கட்டாயப் பயிற்சி களிலிருந்து. தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அன்னிய நாடுகளுக்கு செல்லும் மாணவர் தொகை கூடிய வண்ணம் உள்ளது. இந்த மாணவர்களுடைய திறமைகள் யாவும் மழுங்கடிக்கப்படுகிறது. இவர்களின் எதிர் காலம் கேள்விக் குறியாய் நிற்கிறது இவை யாவற்றையும் எதிர் காலமே உணர்த்தும். தாய் நாட்டில் கல்வி கற்று சொந்த மண்ணை செழிக்க செய்ய வேண்டிய இவர்கள் ஐரோப்பிய நாடுகளின் சோம்பேறி வாழ்க்கை நடத்துகிறார்கள் எமது இளம் சந்ததி 'கள். அடிமை விலங்கை உடைப்பதே கொள்கையென முன்னெடுத்த விடுதலைக் குழுக்களின் தவறுகளினால் இன்று எமது இளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஞர்கள் அன்னிய நாடுகளில் அல்லல் படுகின்றனர், இந்த இளைஞர்கள் அறிவுப் பாதையில் நடக்க வேண்டியவர்கள் தவறாக வழி நடத்தப்பட்டதால் அநியாயப் பாதையில் நடந்து கொண்டுள்ளார்கள். மாணவ சமுதாயம் பின்னோக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கு காரணம் போராட்டத்திற்கு என போடப்பட்ட அத்திவாரத்தின் உறுதியற்ற தன்மையே ஆகும்

இந்த நிலைமையை தொடர விடாமல் உழுத்துப் போன எமது சமுதாயத்தை உரப்பெறச் செய்ய வேண்டும்

- பகீரதன் -

---- 15 ம் பக்க தொடர்ச்சி

திகைகளை விட ஏனையவற்றை தடை செய்வது அவர்கள் அதிகாரத்திற்கு வரும் வேளைகளில் மாறி மாறி நடக்கின்றன. ஆயினும் வெளிநாடுகளில் அந் நிலைமைகள் ஏற்படாமல் இருக்க இங்குள்ள ஜனநாயக சக்திகள் மற்றும் சஞ்சிகைகள் மக்களின் ஆதரவை பயன் படுத்தி இத்தகைய நிலைமைகளை முறியடிக்க வேண்டும். பத்திரிகைகள் சஞ்சிகைகள் தனிப்பட்டவர்களானாலும் சரி குழுக்களானாலும் சரி தவறான நிலைப்பாட்டைக் கொண்டோ, பிழையான திசையை நோக்கியோ, வெளியிடப்படலாம் அத்தகைய கருத்துக்களை கருத்துக்களாலேயே முகம் கொடுப்பது தான் சிறந்த ஜனநாயகப் பண்பு.

ஆ-ர் ஜெ.

* * * * *


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேர்ண்: — கிளர்ந்து எழுந்த சுவிஸ் மக்கள் —

3.03.90 இல் சுவிற்சர்லாந்து பேர்ண் நகரில் அரசியல் பொலிசின் நடவடிக்கைகளைக் கண்டித்து மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. இவ் ஊர்வலத்தில் சுமார் 30 000 பேர் கலந்து கொண்டனர். 1983ம் ஆண்டு நடைபெற்ற சுதந்திர ஊர்வலத்திற்கு பின்பு நடைபெற்ற மாபெரும் ஊர்வலம் என அனைத்து பத்திரிகைகளும் கருத்து தெரிவித்தன. மிக அண்மையில் அரசியல் பொலிசார் சுவிஸ் அரசியல் வாதிகளினதும், வெளிநாட்டவர்களினதும், அரசியல் தஞ்சம் கோரியவர்களினதும், ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட தொலைபேசிகளை இரகசியமாக ஒலிப்பதிவு செய்துள்ளார்கள்.



இவ் அரசியல் பொலிஸ் பிரிவு (BUPO) 1890ம் ஆண்டு சுவிஸில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தினையும் தொழிலாளர் அமைப்புக்களையும் ஒடுக்குவதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டுடன் 100 வருடங்கள் பூர்த்தியாகின்றது. மேலும் இவ்வூர்வலத்தில் "நாங்கள் மக்கள் மட்டும் அல்ல அரசியல் தீர்மான சக்திகளும் கூட" "நாங்கள் தான் மக்கள்! எங்கே எதிரி?" "உளவு செய்யும் நடவடிக்கையை உடன் நிறுத்து" போன்ற கோஷங்களை முன்வைத்திருந்தனர்.

(தொடர்ச்சி 30 ம் பக்கம்)

ஆதாரம் BZ, Tagesanzeiger Zürich

www.tamilarangam.net



# கலை இலக்கியம் — ஓர் கண்ணோட்டம்

மனிதன் இயல்பிலேயே படைப்பாற்றலும் அழகுணர்வும் நிறைந்தவனாக விளங்குகின்றான். ஆனால் சிலருக்கே வாழ்க்கையும், வாழுகின்ற சூழ்நிலையும், படைப்பாளியாய் திகழும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இயல்பிலேயே அழகுணர்ச்சி இருந்தாலும் நல்ல கலையை உணராதிருக்கவும், இலக்கியங்களை அறியாதிருக்கவும் சூழல்தான் காரணமாக அமைகின்றது. இதனாலேயே நல்ல கலை இலக்கியங்கள் படைக்கப்படுகின்ற போதிலும் கூட அவை – வேறுபல காரணங்கள் இருப்பினும் – பெரும்பான்மையான மக்களைச் சென்றடைவதில்லை. இன்றைய சமூக அமைப்பில் இலக்கியமும் படைப்பாளியும் ஒரு பண்டமாய் மாறிவிட்ட கொடுமையால் உருவாகும் சந்தைக்கேற்ப எழுத்தும் (கலையும்) மலினப்படுத்தப்பட்டு அழிகிற நிலையில் மனிதனும் அழகுணர்ச்சி நிலையின்மீது புகைபடிந்தவனாயும் காட்சி தருகின்றான்.

கலை இலக்கியங்கள் வெறும் வியாபாரப் பொருளாகிவிட்ட இன்றைய நிலையில் வழமையாக இருந்துவரும் ஒரு கேள்விதான் நம்முன் வந்து விழுகிறது. அதுவே "கலை இலக்கியங்கள் யாருக்காக?" என்பதாகும். இதற்கான விடை ஏற்கனவே கண்டறியப்பட்டுவிட்டது. இன்று பெரும்பாலான இலக்கியவாதிகளும், படைப்பாளிகளும் சர்வசாதாரணமாக ஏற்றுக் கொள்கின்றனர். "கலை இலக்கியம் யாவும் மக்களுக்கானதுதான் என, ஆயினும் நடைமுறையில் அவர்கள் மக்களுக்கான - சமூகத்துக்கான - கலை இலக்கியங்களையா படைக்கின்றார்கள்?" என்றால் கேள்விக்குறிதான். ஈழத்து நிலைமைகளைவிடத் தமிழகத்து நிலைமையில் இது மிகவும் மோசமாகவே இருக்கிறது. சமூகப் பிரக்ஞை உள்ள படைப்பாளிகள்கூட தாக்குப்பிடிக்க முடியாமல் வியாபாரம் செய்யும் நிலைமைதான் அதிகரிக்கின்றது. நல்ல கலை இலக்கியப் படைப்புக்களும் வராமலா

www.tamilarangam.net



இருக்கின்றன? அவையும் எதிர்நீச்சல் அடித்துக்கொண்டு வருந்தான் செய்கின்றன. அப்படியாயின் இங்கு பிரச்சினை என்ன? எதிர் நீச்சல் போட்டுக்கொண்டு வந்தாலும், மிகப்பெரும்பான்மையான மக்களை வியாபாரப்படைப்புக்கள் ஆக்கிரமித்துள்ளமை, முற்போக்கான படைப்புக்களுக்கும் - பெரும்பான்மையான மக்களுக்கும் உள்ள இடைவெளி - இவைதான் பிரச்சினைக்குரிய விடயங்கள். இதற்குமேலே குறிப்பிட்ட அழகுணர்ச்சி மீது புகைபடிந்தவரும் காட்சிதரும் நிலைமையும் முக்கியகாரணம் என்றாலும் ஏனைய காரணங்களும் ஆராயப்பட வேண்டியவையே. சந்தேகமின்றி இந்த வியாபாரச் சந்தை அழித்து நொருக்கப்பட்டபின்னரே மக்கள்மீது படர்ந்துள்ள புகையை அகற்றலாம். எனினும் சமூகப் பிரக்ஞை கொண்ட படைப்பாளிகளின் பக்கம் உள்ள தவறுகளையும் பார்க்கவேண்டியது தேவையாகிறது.

இக்கட்டுரையில் பொதுவாகக் கலை இலக்கியம் பற்றிச் சொல்லப்பட்டாலும் இலக்கியத்தளமே கூடுதலாகப் பார்க்கப்படுகிறது. காரணம் கலை வடிவங்களான ஓவியம், நாட்டியம், நாடகம், சினிமா போன்றவை பெரும்பாலும் வியாபாரச் சக்திகளின் கைவசமாகிவிட்ட நிலையில் அவற்றை மீட்டெடுப்பதும் புனர்நிர்மாணிப்பதும் வேறு வகைகளில் ஆய்வு செய்யப்பட வேண்டிய பிரச்சினைகள். ஆனால் எதிர் நீச்சல் அடித்துக் கொண்டிருக்கும் இலக்கியப் பக்கம் மேலும் முன்னேறவும் அழிந்துவிடாமலும் இருக்க அதனது தவறுகள் களையப்படவேண்டும்.

இன்றைய மூன்றாம் உலக நாட்டு மக்கள் குறிப்பாக ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க, ஆசிய மக்கள் தமது மண்ணில் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்காகப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் போராட்ட வாழ்க்கையினூடு வெளிப்படும் கலை இலக்கிய வெளிப்பாடுகள் அரசியல் சார்பானவையாக இருப்பது தவிர்க்க முடியாதது. குறிப்பாக இந்தியா,

www.tamilarangam.net



இலங்கையை எடுத்து நோக்கின் இவ்வாறான படைப்புகள் சிறு பத்திரிகைகளாக, கவிதைத் தொகுப்புகளாக, நாவல்களாக, கட்டுரைகளாக வெளிவருகின்றன. இந்நாடுகளின் பெரும்பான்மையான மக்கள் தாம் அடக்கப்படுவதையும், சுரண்டப்படுவதையும் எவ்வாறு தெரிந்து கொள்ளமுடியாதவர்களாக காணப்படுகிறார்களோ அவ்வாறே அங்கு வெளியாகும் படைப்புக்களையும் உணர முடியாமல் அறிய முடியாமல் அந்நியப்பட்டிருக்கின்றார்கள். வெளியாகும் நல்ல இலக்கியங்களும் கலைகளும் அதனது 'மேதாவிலாசத்தன்மை' காரணமாக ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே சுற்றிச் சுழல்கின்றன. இவ்வாறு குறிப்பிட்ட சிறுபான்மையினரிடம் இவை ஆதிக்கம் செலுத்துவதால் பெரும்பான்மையானவர்கள் அந்நியப்படும் நிலைதான் தென்படுகிறது. 'உங்களுக்குப் புரியாது' என அவர்களும் 'எங்களுக்குப் புரியாது' என இவர்களும் ஒதுங்கிப்போகின்ற நிலைமையில் இடைவெளி ஏற்படுகின்றது. இந்த இடைவெளியை 'ஜனரஞ்சகப்படைப்புகள்' என்று சொல்லப்படும் வியாபாரப் படைப்புக்கள் வந்து ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

அடுத்ததாக இவ்வாறு அந்நியப்படுவதற்கான காரணங்களைப் பார்ப்போமாயின்;

i) படைப்புக்களையும் வெளிப்பாடுகளையும் இயந்திரத் தனமாக வகைப்படுத்தல்

ii) எல்லாவற்றிலும் தீர்வுகளைத் திணிக்கும் தன்மை

iii) கற்பனையான சொல் அலங்காரம் அல்லது மேதாவிலாசம்

iv) யதார்த்தமற்ற எளிமை-மிகையான எளிமைப்படுத்தல்

கடந்தகாலங்களில் இருந்து இன்றுவரை கலை இலக்கியங்களை இயந்திரத் தனமாக வகைப்படுத்தும்போக்கு தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அதாவது பாட்டாளி வர்க்கம்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாளித்துவம், திரிபு வாதம், நசிவு வாதம் என்று வகைப்படுத்தி முத்திரை குத்தி ஒதுக்கி விடுவது. இத்தகைய போக்கினால் பல முற்போக்கு எழுத்தாளர் சங்கங்களும் பேரவைகளும் சிதறுண்டு போனதுதான் வரலாறு. இவ்வாறான இயந்திரத்தனமான வரையறைகளால் எழுத்தாளர்களும் படைப்பாளிகளும் தங்களது 'சுதந்திரம்' பறிக்கப்படுவதாகக் கருதி அமைப்புக்களில் இணையத் தயங்குவதும், எதிர் நிலைக்குச் செல்வதும்தான் நடக்கின்றன. உண்மையில் படைப்பின் பயன் தன்னிறைவின் தளத்தில் விரிய வேண்டியது மனிதனுக்குத் தன்னையும் சூழலையும் குறித்துள்ள அறிவை விரிவடையச் செய்வதும், உரைச் செய்வதும், புதுப்பிக்கச் செய்வதும், மாற்றியமைக்கச் செய்வதுமான எல்லாப் படைப்புகளும் பயனுள்ளவையே.

அடுத்து எல்லா வகையான படைப்புகளிலும் தீர்வு காணத் திணிக்கும்போக்கு; கவிதையாகட்டும், கதைகள், சிறுகதைகள், சினிமா, நாடகம் போன்றவற்றில் - சமூகப்பிரச்சனை அல்லது அரசியல் பிரச்சனை உள்ளடக்கமாக இருக்கும்போது கட்டாயம் அதற்குத் தீர்வு ஒன்றும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் போக்கு இது கூட ஒரு வகையில் இயந்திரத்தன்மை வாய்ந்ததே. இத்தகைய போக்கின் பாதிப்பு ஐரோப்பாவில் உள்ள வளர்ந்துவரும் படைப்பாளிகளிடம் காணக்கூடியதாக உள்ளது. எங்கே விமர்சனம் வந்துவிடுமோ என்ற அச்சமும் இதற்குக் காரணமாக அமைகின்றது.

சில படைப்பாளிகள் கற்பனையான சொல் அலங்காரங்களையும், புரிந்து கொள்ள முடியாத கலை நுட்பங்களையும் பாவித்துத் தங்கள் மேதாவிலாசத்தை காண்பிக்கிறனர். நல்ல கலை நுட்பமும் கலைச் சொற்களும் தேவைதான், உயர்வானவைதான். ஆனால் வாசகன் அல்லது ரசிகன் இருக்கும் நிலைமையைப் புரிந்து அவர்களுடன் அனுசரித்துப் போய் அவர்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த உயர்ந்த வளர்ச்சிக்கு வளர்த்தெடுக்க வேண்டும். இவர்கள் தங்கள் மேதமையைக் காட்டும் நடவடிக்கைகளைச் செய்வதனால் யாருக்கு என்ன பயன்?

யதார்த்தமற்ற எளிமையும், மிகையான எளிமைப் படுத்தலும் இன்று அதிகமாகக் காணப்படுகின்றன. மேலே சொன்ன மேதாவிலாசத்தன்மையை உடைத்தெறியும் அவாவில் அல்லது அவர்கள் விட்ட தவறை நாமும் செய்யக் கூடாது என்ற நோக்கில் மிகையான எளிமைப்படுத்தலுக்கும், யதார்த்தமற்ற எளிமைப்படுத்தலுக்கும் சென்று விடுகிர்கள் சில படைப்பாளிகள். யதார்த்தமற்ற எளிமைப்படுத்தும் போக்கு என்பது புறச்சூழல் அல்லது வாழ்நிலையில் காணப் படாத கற்பனையில் படைத்துத் திருப்தி காணும் போக்காகும். இத்தன்மை அரிதாகவே காணப்படுகின்றது. ஆயினும் மிகையான எளிமைப்படுத்தல் என்பது வளர்ந்து வரும் எழுத்து எழுத்தாளர்களிடம் குறிப்பாக ஐரோப்பாவில் உள்ளவர்களிடம் மிகையாகவே காணப்படுகின்றது. உதாரணம்:- தாண்டுதல், தேடி, தேடல், மனிதம் போன்றவற்றில் வெளிவரும் ஆக்கங்கள். இவை இரண்டுமே தவறான போக்குகள், வாசகரால் கவரப் படமுடியாதவை, பரிகாசத்துக்குள்ளாகக் கூடியவை. அதிக விஞ்ஞானத் தத்துவங்கள், சித்தாந்தங்கள் மக்களைச் சென்றடையவில்லை, எளிமைப்படுத்தப்படவில்லை எனக் கருதி அவற்றை தங்கள் படைப்புக்களுக்கூடாகச் சொல்ல முனையும் - மிக எளிமைப்படுத்தி - படைப்பாளிகளின் நோக்கம் நல்லதாக இருப்பினும் ஆழமான இத்தத்துவங்களை மிக எளிமைப்படுத்தி சொல்வதனால் அவர்கள் எடுத்த நோக்கத்தைவிட்டு விலகுவதும் அல்லாமல் அதன் விளைவும் வேறுவிதமாக அமைகிறது. இதன்மூலம் தமது கலைப்படைப்புக்களையும் வெறும் பிரச்சாரமாக்கி விடுகிறார்கள்.

www.tamilarangam.net



மேற்சொன்ன நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இங்குள்ள படைப்பாளிகளைப் பார்ப்போமாயின் கடந்த காலங்களில் முற்போக்குப் படைப்புக்களில் இருந்துவந்த இயந்திரத் தனமான வகைப்படுத்தும் தன்மை இன்றைய சமூகப் பிரக்ஞை கொண்ட படைப்புக்களில் தளர்வடைந்து வரும் நெகிழ்வுத்தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. ஆயினும் சொல்லலங்காரம், மிகையான எளிமைப்படுத்தல், தீர்வுகளைத் திணிக்கும் போக்கு போன்றவை நிவர்த்திக்கப்பட வேண்டியவை. எனினும் போராட்டப் பின்னடைவுச் சூழல், அல்லல்படும் அகதி வாழ்வு, ஜனநாயக மறுப்பு போன்ற பாதகமான சூழல்களிலும், சமூகப் பிரக்ஞை உள்ள படைப்புக்களும், படைப்பாளிகளும் உருவாகிவருவது ஆரோக்கியமான வளர்ச்சியே. ▪

•ராகவன்•

---

(----12ம் பக்க தொடர்ச்சி)

சிறுவர் பாடசாலையில் ஒழுக்கம், அமைதிபேணல், சேர்ந்து விளையாடல், அவதானித்தல், பார்த்துச்செய்தல், அபிநயம் பிடித்தல், நிறம் அறிதல், சூழல் அறிதல் போன்ற முக்கிய விடயங்களை சொல்லிக்கொடுப்பதில் முதல் வருடத்தையும் பாடசாலைச் சூழலை தெரிந்து கொள்ள இரண்டாம் வருடத்தையும் பயன் படுத்துவர். முதலாவது எழுத்தை பாடசாலையில் (Schule) வைத்தே படிப்பிப்பார்கள்.

தொடரும் -

மீர்ஜினி மாஸ்டர்.

---

(---- 24ம் பக்க தொடர்ச்சி)

இக் கண்டன ஊர்வலம் பேர்ணில் அமைந்திருக்கும் நீதி - பொலிஸ், இராணுவ அமைச்சகத்தை நோக்கி செல்வதற்கு பொலிஸாரினால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. பின்பு 30 000 பேரிற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டதால் அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் கோபமடைந்தோர் பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்டனர் இதன் போது ஓர் வங்கி தாக்கப்பட்டதுடன் மூன்று கார்கள் தீக்கிரையாக்கப்பட்டது - இதனை பத்திரிகையாளர்கள் பேர்ண் மாநகரமே பெய்ரூட் போல் காட்சியளித்தது எனக் குறிப்பிட்டிருந்தனர். .o.

www.tamilarangam.net



# புராதன வாழ்விலிருந்து..... (2)

காந்தனும் மகேசனும் சந்தித்து இடையில் எப்படியோ மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது. விரைவில் சந்திக்கின்றேன் என்று விடைபெற்றுச் சென்ற மகேசன், இன்று தான் மீண்டும் காந்தனை சந்திக்க வரச் சொல்லியிருந்தான்.

புராதன சமுதாயம் பற்றி ஏற்கனவே மகேசனிடம் சில விளக்கங்களைப் பெற்றதாலும், அடுத்த அடிமை சமுதாயம் பற்றி அறியும் ஆர்வமும், மூன்று மாதங்களுக்குப் பின் நண்பனை சந்திக்கும் விருப்பமும் இணைந்து மிக விரைவாக மகேசனின் வீட்டை நோக்கி 'சைக்கிளில்' காந்தனைச் செல்ல வைத்தது. இப்போது படை வெளியேற்றத்தால் பள்ளிக் கூடத்தில் போட்டிருந்த 'ஆமிக்காம்' எடுக்கப்பட்டிருந்தது. இதனால் இந்தியன் 'ஆமியின்' கெடுபிடிகள், கொஞ்சம் குறைந்திருந்தது. இருப்பினும் இரவுகளில் பயங்கரத்துக்குக் குறைவில்லை...

நண்பர்கள் இருவரும் சந்திக்கின்றனர்.... நீண்ட நேரமாக அவர்களின் உரையாடல்கள் எங்கெல்லாமோ சுற்றி இறுதியில் விடயத்திற்குத் திரும்பியது. மகேசன் பண்டைய சமுதாயத்தின் இறுதிக்காலங்களில் நடைபெற்ற மாற்றங்களைப் பற்றி கூறத் தொடங்கினான்.

"புராதன காலத்தில் மனிதர்கள் வேறு ஒரு இனக் குழுவைக் கண்டால் அவர்களால் தமக்கு ஆபத்து வந்து விடும் என்று கருதி வலுவுள்ள குழுவினர் வலுக்குறைந்த குழுவினரைக். கொன்று விடுவது வழக்கம். ஆனால் பின்பு வந்த மனிதர்கள் சண்டையில் இறந்தவர்கள் போக எஞ்சியோரைக் கைது செய்து வைத்திருக்கும் வழக்கத்தை கடைப்பிடித்தார்கள். ஏனென்றால் மனிதர்களுக்கிடையில் தேவைகளின் அதிகரிப்பானது இன்னமும் கூடிய

www.tamilarangam.net



அளவில் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் பௌதீக செல்வங்களின் பெருக்கத்தை வேண்டி நின்றது. அதனால் இவற்றை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் மனித உழைப்புத் தேவைப்பட்டது. கைதிகளாகப் பிடித்து செல்லப்பட்ட இம் மனிதர்கள் இப்பௌதீக செல்வங்களின் உற்பத்தியில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டார்கள். இப்படி படிப்படியாக மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் முறை தோற்றம் பெற்றது. அங்கு யார் கூடிய அடிமைகளை வைத்துள்ளார்களோ, சமுதாயத்தில் அவர்களது அந்தஸ்து மேலோங்கியதாக இருந்தது. இந்த அடிமை சமுதாய நிலை ஆசியாவில் தோற்றம் பெறவில்லை. ஆனால் ஐரோப்பாவில் குறிப்பாக புராதன கிரேக்கத்திலும், ரோமா புரியிலும் பிரசித்தி பெற்றதாய் கோலோச்சியிருந்தது. அங்கு சிறந்த விஞ்ஞான வளர்ச்சியும், கலை, அழகிய கட்டிடங்கள் போன்றவையும் உருவாகமடைந்தன. இவையெல்லாம் எத்தனையோ இலட்சம் அடிமைகளின் ரத்தத்தையும் தசையையும் பிழிந்து பெறப்பட்ட சாதனைகளாகும்!"... என்று தொடர்ந்தவனை, பொறு மகேசன்! என்ற காந்தனின் குரல் தடுத்தது.

காந்தன் : நீ இப்படி தொடர்ச்சியாக கூறுவதைவிட முன்னர் பண்டைய சமுதாயத்தில் 'அநு' என்பவர் மேலும் அவர்களின் வாழ்க்கையைப் புரிய வைத்த மாதிரி அடிமைகள் பற்றி சம்பவங்களை அடிப்படையாக வைத்து சொன்னால் புரிவதற்கு இலகுவாக இருக்கும்.

காந்தனின் வளர்ச்சியை கதையில் கொண்டு இன்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் ரோமா புரியில் நடைபெற்ற மனித வரலாறு கண்ட முதல் புரட்சியெழுச்சி' யென வர்ணிக்கப்படும், 'ஸ்பட்டகஸ்' என்பவனின் தலைமையில் நடைபெற்ற அடி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மைகளின் கலகங்களைப் பற்றிய வரலாற்றை, தான் அறிந்து வைத்திருந்த தகவல்களில் இருந்து விளக்கினான் மகேசன்.

'ஸ்பாட்டகஸ்' அவனின் எசமானர்களிடம் உள்ள ஆயிரக்கணக்கான அடிமைகளில் அவனும் ஒருத்தன். அவன் அறிந்த வரை அவனும், ஏனைய அடிமைகளும் கூலியில்லாமல் அதிகாலையில் இருந்து பொழுது வரை எசமான்களுக்கு உழைப்பதே வாழ்க்கை. வேலையில் அவர்கள் ஈடுபடுத்தப்படும் போது கால்களில் விலங்கு மாட்டப் பட்டிருக்கும். இன்றும் பிரசித்தி பெற்றதாய் ரோமில் விளங்கும் கட்டிடங்கள் எல்லாம் இவர்களால்தான் உருவாக்கப்பட்டது. உழைப்பில் வலுக்குறைந்தவர்கள், வயது போனவர்கள் கொல்லப்பட்டார்கள். அல்லது வேறு யாருக்காவது விற்கப்பட்டார்கள். அடிமைகளுக்கு சாப்பாடு ஓரளவு கிடைத்தது. அதுவும், வேலை வாங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டும்தான். இரவு வந்ததும் கொட்டகைகளில் கைதிகள் போல் அடைக்கப்பட்டார்கள். இதேபோல் அடிமைப் பெண்களும் இருந்தார்கள். அவர்களும் வேலை செய்வது எசமானர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப நடந்து கொள்வது, அடிமைகளுக்கு பொது மனைவியராக இருப்பது போன்றவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்டார்கள். எசமானின் பார்வையில் படும் 'நல்ல' அடிமைகளுக்கு இரவுகளில் மனைவியராக நடந்து கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

இந்த அடிமைகள் தாம் பிறந்தது முதல் வாழ்க்கையில் துன்பங்களைத் தவிர வேறு ஒன்றையும் கண்டதில்லை. இந்தக் கொடுங்கோன்மைக்கு எதிராக அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இயலாமையின் இறுதிக் கட்டத்தில், அவ்வப்போது யாராவது கொதித்தெழுந்தால் அவர்களைச்

www.tamilarangam.net



சிங்கங்களிற்கு இரையாக்குவார்கள். அல்லது சாகும்வரை கசையடி கொடுப்பார்கள். இதற்குப் பயந்து இவர்கள் எசமானர்களை மனதால் மட்டும் திட்டி, தீர்ப்பு வழங்கி, தண்டனை நிறைவேற்றுவதோடு தங்களை தேற்றி வாழப் பழகிக் கொண்டார்கள்.

'ஸ்பட்டகஸ்' இளமையில் இருந்தே எதிர்ப்புணர்வு மிக்க. வனாகவும், சண்டைகளில் வல்லமையுள்ளவனாகவும் சிறந்த உடற்கட்டுடையவனாகவும் திகழ்ந்தான். எல்லா அடிமைகளும் தங்கள் இழிநிலைக்காக விதியை நொந்து வருந்திக் கொண்டிருக்கையில் 'ஸ்பட்டகஸ்'சால், அப்படியிருக்க முடியவில்லை. கொலைகளும், சவுக்கடிகளும், பட்டினிகளும் மற்றவர்களுக்கு பீதியூட்டிய மாதிரி 'ஸ்பட்டகஸ்'ற்கு, உண்டாக்கவில்லை. எசமானர்களின், பொறுக்க முடியாத கொடுங்கோன்மைக்கு எதிராக அவ்வப்போது எதிர்ப்புக்களைக் காட்டினான். இதற்காக பலமுறை அவன் தண்டனைக்குள்ளாக்கப்பட்டான். எப்போதுமே சாவை எதிர் நோக்கியிருந்தான். பலசாலியும் சிறந்த போர்வீரனுமாயும் இருந்த காரணத்தால் அவனை நல்ல விலைக்கு விற்க முடியுமென்பதால் இன்னமும் உயிருடன் வாழ அவனை எசமானால் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

'ஸ்பட்டகஸ்' காலத்திய ரோமாபுரியில், தனி ஒரு அரசன் என்ற ஆணையின் கீழ் அரசாட்சிமுறை இருக்கவில்லை. பல்வேறு எசமானர்களால் கூட்டாக கவனிக்கப்படும் எசமானர்களின் ஆதிக்கம் நிறைந்த அரச அமைப்புகளே காணப்பட்டன. அன்றைய சமுதாயத்தில் ஆளும் வர்க்கங்கள், எசமானர்கள், அவர்களுக்கென்று அரண்மனைகள், நிலம், அடிமைகள்.... எல்லாம் இருந்தன. ஒடுக்கப்படும் வர்க்கமாக அடிமைகள் இருந்தனர். இவர்களுக்கு எதுவுமே சொந்தமாக இருக்கவில்லை. பாரிடம்

www.tamilarangam.net



கூடுதலாக அடிமைகள் இருந்தனரோ அவன் மற்றவர்களை அடக்கியாள முற்பட்டான். ஸ்பட்டகஸ் எப்போதுமே தான் இந்த வாழ்க்கையில் இருந்து விடுவித்துக் கொண்டு சுதந்திர மனிதனாக வாழ வேண்டும் என்று நினைத்திருந்தான். அதுபோல் தன்னுடன் இருக்கும் மற்றவர்களையும் விடுவிக்க வேண்டுமென்றும், எண்ணியிருந்தான். இதற்கான நாளை எப்பொழுதுமே ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். அவனது எண்ணத்தை விரைவு படுத்திய அந்த நாளும் வந்தது.

அன்று ரோமா புரியே விழாக் கோலம் பூண்டிருந்தது. எங்கும் தோரணங்களால் கொண்டாட்டங்களால் களைகட்டியிருந்தது. விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக அடிமைகளைச் சண்டையிட வைத்து, செனட்டர்கள் அவர்கள் இறப்பதை பார்த்து ரசிப்பார்கள். இந்தடவை கொடூரம் நிறைந்த இச்சண்டைக்கு ஸ்பட்டகஸ்சும் தெரிவு செய்யப்பட்டான். தன்னால் முடியாது என்று ஸ்பட்டகஸ் எவ்வளவோ எடுத்துக் கூறி மறுத்து விட்டான். முடிவாக அவர்கள் கூறிவிட்டார்கள் "நீ சண்டையிட்டு மற்றவனை ஜெயித்தால் உயிருடன் இருக்கலாம். இல்லாவிட்டால் உனது முடிவை, மற்றவன் பார்த்துக் கொள்வான்!" என்றுமே செய்ய முடியாத கையறு நிலை ஸ்பட்டகஸ்க்கு. சிறைக்கு முன்பின் தெரியாதவனை தனிப்பட்ட ரீதியில் தனக்கு எந்த விதத்திலும் தீங்கிழைக்காத அந்த மனிதனை, தன்னைப் போன்ற அடிமையை எசமான் களிப்பதற்காக தான் ஏன் கொல்ல வேண்டும் என ஸ்பட்டகஸ் நினைத்தான். ஆனால் அவன் ஜெயிக்காவிட்டால் மற்றவனின் கத்திக்கு தான் இரையாகி இறக்க நேரிடுமே என்ற எண்ணம் ஒரு புறமாக அவனை சஞ்சலப்பட வைத்தது.

ஸ்பட்டகஸ்சுடன் சண்டையிட வந்த மற்ற மனிதனும் இவ்-

www.tamilarangam.net



வாறே சிந்தித்தான் போலும். அதனால்தான் ஸ்பட்டகஸைப் பார்த்து புன்முறுவலுடன் இருந்தான். இதுபற்றி அந்த மனிதன் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

ஒருவாறாக ஸ்பட்டகஸும் அந்த உயரமானவனும் சண்டைக்கென அழைக்கப்பட்டனர். எசமானர்கள் பார்வையாளர்கள் மத்தியில் பலத்த கரகோஷம் எழுந்தது. ஸ்பட்டகஸ் தன் பலம் கொண்ட மட்டும் அந்த உயரமானவனைத் தாக்கினான். மற்றவனும் சளைத்தவனல்ல, தடுத்து திருப்பித் தாக்கினான். நீண்ட நேரம் முடிவே இல்லாத சண்டை. இறுதியில் அந்த உயரமானவன் ஸ்பட்டகஸைக் கீழே வீழ்த்தி கத்தியால் ஸ்பட்டகஸின் மார்புக்கு நேரே குறிவைத்தான். இனி 'ஸ்பட்டகஸ்' பிழைக்க வழியேது எசமானர்கள் தரப்பில் இருந்து அவனைக் கொல்! கொல்! என்று ஒரே கோஷம். அந்த உயரமானவன் ஸ்பட்டகஸைப் பார்த்து ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு எசமானர்களை நோக்கி தன் கத்தியை வீசிவிட்டு அவர்களைத் தாக்குவதற்காகப் பாய்ந்தான். எங்கிருந்தோ வந்த சேவகர்களின் கத்தி அவனைக் காவு கொண்டது. இமைப்பொழுதில் நடைபெற்ற இச்சம்பவம் 'ஸ்பட்டகஸை' அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நான் ஜெயித்திருந்தால் அவனைக் கொன்று தானே இருந்திருப்பேன். ஆனால் மற்றவனோ தன்னை விட உயர்வான சிறந்த முடிவை எடுத்து விட்டானே என்பதைப் பார்க்கும் போது உள்ளம் கூனிக் குறுகினான். இச்சம்பவத்திற்குப் பின் 'ஸ்பட்டகஸ்' தனது எண்ணங்களை விரைந்து செயல்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்தான். விரைவிலேயே 'ஸ்பட்டகஸ்'உம் ஏனையோரும் தாம் தப்பி ஓடுவதற்கான தயாரிப்புகளைச் செய்து கொண்டு முதலில் தாம் அடைபட்டிருக்கும் சிறைகளை உடைத்துக் கொண்டு பலத்த தியாகங்களின் மத்தியில் தப்பியோடினார்.

www.tamilarangam.net



இவர்களின் இந்தக் கலகத்தால் ரோமாபுரியே ஆட்டங்கண்டது. அடிமைகளின் சொந்தக்காரர்களான செனேட்டர்கள் தங்கள் வரலாற்றில் கண்டிராத பீதிக்குள்ளானார்கள். இந் நிலை தொடர்ந்தால் எங்கே தங்கள் ஆதிக்கம் அடக்குமுறை அதிகாரம்.... எல்லாம் கனவாகிப் போய்விடுமோ என்று கலங்கினார்கள். எப்படியும் ஸ்பாட்டகஸையும், அவனுடன் தப்பிச் சென்றவர்களையும் தேடி அழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டினார்கள். ஸ்பாட்டகஸும், மற்றவர்களும் காடுகளிலும், மலைகளிலும் தங்கள் பாதுகாப்புக்கான இடங்களை தேடிக் கொண்டனர். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சிறிய சேனைகளைத் தாக்கி அடிமைகளை விடுதலை செய்தார்கள். அவர்களில் பலரும் 'ஸ்பாட்டகஸ்'ஸின் கூட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டனர். போராடுவதற்கான பயிற்சிகளையும் பெற்றனர். இப்போதும் இவர்களிடம் சிறந்த போர்த்தந்திர உடைவாட்களோ ஆயுதங்களோ இருக்கவில்லை. ஆனால் வர்க்க கோபம் இவர்களின் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்தது.

ஆயுதங்கள் மற்றும் செல்வங்களையும் ஆட்பலத்தையும் வைத்திருந்த சேனைகள் இறுதியில் 'ஸ்பாட்டகஸ்'ஸை சிறைப்பிடித்தனர். அவனது கூட்டத்தினர் பலரும் சிறைப்பிடிக்கப்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர் ரோமாபுரியில் செனேட்டர்கள் எல்லோரும் கூடி 'ஸ்பாட்டகஸ்'ஸையும் அவனையொத்தவர்களையும் சிலுவையில் அறைந்து கொல்வதென்று முடிவு செய்து அவ்வாறே தண்டனையளித்தனர்.

'ஸ்பாட்டகஸ்' இதைக் கண்டு கலங்கவில்லை. புன்முறுவலுடன் சிலுவையில் தொங்கினான். அவனுடைய வாழ்க்கை ஓர் அர்த்தம் நிறைந்ததாகவே இருந்தது. அடக்குமுறை கொடுங்கோன்மையில் இருந்து தன்னையும் மற்றவர்களை

(தொடர்ச்சி 59 ம் பக்கம்)

www.tamilarangam.net



# மண்டேலாவுக்கு வாழ்த்து!

சிறையுண்டு கிடக்குமொரு தேசத்துள்
ஒரு சிறைக் கதவு திறந்தது.
ஒரு சிங்கம் வெளி வந்தது.



இருபத்தேழாண்டுகள்
ஒரு மனிதனின்
பயனுள்ள வாழ்வின் பெரும் பகுதி
கற்சுவர்கட்கும்
கம்பிக் கதவுகட்கும்
பின்னாற் கழிந்தது.
சிறைக் கூடங்கள் எங்கிருப்பினும்
சிறைக் கூடங்களே.

தனிமையும் கொடுவதையும்
கற்சுவரும் காவலரும்
கோழைகளை
நடைப் பிணங்களாக்குகின்றன.
வீரர்களைச்
வரலாற்று நாயகர்களாக்குகின்றன.

சிறை கிடந்து தணியாத
விடுதலை வேட்கை
சிறை நீங்கி ஓயாது.
அரை நூற்றாண்டு
ஒரு தேசத்தின் ஆயுளில்

அந்த காலமே.
என்னும்
இன்னும் அதை நீட்டமேனும்
அடிமைத்தனம்
ஏன் நீடிக்க வேண்டும் ?

சிறை மீண்ட சிங்கத்தின்
கர்ஜனையின் இடியொலியில்
மூழு நாடும்
சிலிர்த்தெழட்டும் !
உலகெங்குமுள்ள
சிறைச் சுவர்கள் பொடிபடட்டும்.

• சிவா. லண்டன் •

## படியுங்கள்

**தாயகம்**
ந. இரவீந்திரன்
15/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

புதிய கலாச்சாரம்
அ.முகுந்தன்,
55, தேரு நகர்,
வில்லிவாக்கம்,
சென்னை - 600 0049.

மனஓசை
த. பெ. எண் : 2484,
24, சாரங்கபாணி தெரு,
மேத்தா நகர்,
சென்னை-600 029.

**தூண்டில்**
"Thoondil"
Süd Asien Büro
Große Heimstr.58
4600 Dortmund 1
B.R.D

'புதிய ஜனநாயகம்'
ஆசிரியர்,
எஸ். மதியழகன்
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

கேடயம்
த. பெ. எண். 2480,
21-ரயில்வே காலனி,
இரண்டாவது தெரு,
மேத்தா நகர்,
சென்னை-29.

"சுவடுகள்"
Tamilsk-Norsk Kafe
Herslebs Gate 43
0578 Oslo
Norwegen

"அஆஇ"
"AANAA AAWANNAA IENAA"
Postbus 8523
8905 KM Leeuwarden
Holland

.O.

www.tamilarangam.net



# .புதிய சஞ்சிகைகள் அறிமுகம்.




Sinna Rajeswaran
"AMUTHAM"
Gladbacherstr.16,
5013 Elsdorf(RHLD)
B.R.D




ஒசை
R.Rajagobal,
5 Rue Hermel,
75018 PARIS,
FRANCE.


அக்னி

AGNI
Alleenstr. 17,
7144 Asperg.
B.R.D

தாயகம்
Editor:
George R.Ckrhushchev
Georgicka Communications,
P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7
CANADA

உங்கள் நண்பருக்கு **மனிதம்** அனுப்ப வேண்டுமா--- ?

## என் நண்பருக்கும் மனிதம் அனுப்பவும்



எனது நண்பர் ........................................

முகவரி ........................................

நகரம் ........................................

நாடு ........................................

என்பவருக்கு நேரடியாக மனிதம் இதழை எனது பரிசாக அனுப்பிவைக்கவும். இத்துடன் அதற்கான ஒருவருட சந்தாத்தொகையான Fr...... அனுப்பியுள்ளேன்.



இங்ஙனம்,

பெயர் ........................................

முகவரி ........................................

www.tamilarangam.net



# சொர்க்கபுரி சுவிற்சர்லாந்தில் ஒரு நூல் வெளியீட்டு விழா!

வெளியீட்டு வைபவம்



பைசாரின் சிறப்பு நாட்சி

விளக்கத்தோடு தலைமையுரை நிகழ்த்தினார்.

எஸ். கருணா

இது கடந்த 13.1.90 அன்று சுவிஸில் நடந்த ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் நான்காவது வெளியீடாகிய "தேசம் தாண்டிய நதிகள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு வைபவம் பற்றி 18.2.90 வீரகேசரியில் வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகளாகும்.

இதைத் தொகுத்தளித்த ஏஸ். கருணாநிதி வைபவம் பற்றி அளவுக்கதிகமாக மிகைப்படுத்தியுள்ளார். இது எமது நாட்டு பத்திரிகைகளும் மக்களும் ஐரோப்பிய தமிழர்களினது மொழியார்வம், கலையார்வம் பற்றி ஒர் தவறான அல்லது மிகையான கணிப்பீட்டை செய்வதற்கு வழிசமைக்கலாம் என்பதால் இந் நிகழ்ச்சித் தொகுப்பில் பொதிந்திருக்கும் மிகையான அம்சங்களை மனிதம் வெளிக்கொணர்கிறது.

கலைஞர்களின் ... வேட்கையாலும் ஆர்வத்தாலும் வெறும் நூல்வெளியீட்டு விழாவாக மட்டுமல்ல கலை நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கியதான ஒருவிழாவாக ஏற்பாடு செய்திருந்தனர். நூல் வெளியீட்டுவிழா என்பதிலும் பார்க்க தமிழ்க்கலை விழாவெடுத்தார்கள் என்றால் மிகையாகாது.

ஆங்கிலப் பழமொழி (Something is better than nothing) கூறுவது போன்று வெறுமையிலும் பார்க்க சிறிதளவு என்பது உண்மையானதுதான். ஐரோப்பிய எழுத்தாளரின் ஆக்கங்களை தாய்மொழியில் கொண்டுவரும் கைங்கரியத்தைச் செய்கின்ற ஐரோப்பிய

எழுத்தாளர் ஒன்றியத்தினதும், நூல் வெளியீட்டு நிகழ்ச்சியினை ஒழுங்கமைத்த அதன் சுவிஸ் கிளையினரதும் இலக்கிய முயற்சிகள் வரவேற்புக்குரியன. இதனை முழுமையாகிவிட முடியாது என்பதும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டியதாகும்.

இந் நூல்வெளியீட்டு விழா பற்றி அளவுக்கதிகமாக மிகைப்படுத்தி எழுதப்பட்டிருப்பது ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் புகழுக்காக இம் முயற்சியை செய்கிறதா என்ற சந்தேகத்தை எழுப்பக்கூடியது என்பதை ஐ.த.எ ஒன்றியம் நனித்து நோக்கவேண்டும்.

நூல் வெளியீட்டினைத் தொடர்ந்து மேடையில் கண்ட நிகழ்ச்சிகள் எழுத்திலொரு விழாவைப் பார்ப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தின.

வாசகனுக்கு இரசனை ஊட்டுவதற்காக நிகழ்ச்சித் தொகுப்பில் இலக்கிய நயத்தினை இழையோட விடுவது இயல்புதான். அதற்காக கம்பன் காலத்து 'அயோத்தி வர்ணனைகள்' இன்றைய உலகின் இலக்கிய நயங்கள் ஆகா!

**குத்தும் குளிரிலும்**
**கொட்டும் பனியிலும்**
**குதூகலிக்க ஒரு**
**தமிழ் விழா!**

'சுவிற்சர்லாந்த சொர்க்க லோகம்' அது யாருக்கு என்பது ஒருபுறம் இருக்கட்டும்!

கடந்த சில வருடங்களாக சுவிஸின் குளிர் மிகக் குறைவு என்பது நாம் அறிந்ததே. அப்படி குளிராக இருப்பினும் இந் நிகழ்ச்சியானது ஏதோ திறந்தவெளி அரங்கில் நிகழ்ந்தது போன்று மிகைப்படுத்தப்பட

ஆயிரக்கணக்கான ஊசிகள் கொண்டு ஒரே முறையில் குத்தினால் எப்படி வலிக்கும்? அதே போன்ற வலியை. வேதனையைக் கொடுக்கும் குளிரின் கொடுமையிலும் கொட்டும் பனி மழையிலும் இவ்வைபவத்தை ஏற்பாடு செய்த தமிழ் நெஞ்சங்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

வேண்டியதும் அவசியந்தானா?

ஜெர்மன் பல்கலைக்கழக தத்துவியல் பேராசிரியரும் திருக்குறளை டொச் (ஜெர்மன்) மொழியில் மொழிபெயர்த்தவரும் தமிழிலக்கியத்தின் வனப்பாலும், வளத்தாலும், சுவையாலும் கருத்தாலும் தமிழின்பால் ஈர்க்கப்பட்டு தமிழிலக்கியத்தை ஆய்வுசெய்யும் ஆர்வத்தொடிருக்கும் திரு. உ. வே பைசாற் அவர்கள் ......

ஒவ்வொரு தமிழ் நெஞ்சங்களையும் தம்மைத்தாமே ஆராய்ச்சி செய்ய வைக்கக்கூடியதாக மிகவும் அரிய கருத்துக்களையும் நல்ல சிந்தனைகளையும் சிறப்புரையில் சிந்தியிருந்தார்.

மேலும் ஜேர்மனி தத்துவவியல் பேராசிரியர் "பைசாற்" இன் ஆங்கில உரை தமிழில் மொழிபெயர்க்கப்படாத நிலையில் இதை எத்தனை பேர் புரிந்து கொண்டிருப்பர்; தம்மைத்தாமே ஆராய்ச்சி செய்திருப்பர்?

ஒன்றியத்தின் தலைவர் .M. அரியநாயகம் வெளியீட்டு உரையின்போது ----
செ. யோகநாதனின் முன்னுரையிலிருந்து,

> சமூக ஒடுக்குமுறை இன ஒடுக்குமுறை ஆகிய மானிடத்தின் மீதான தளைகளை அறுத்தெறிய குரல் கொடுக்கின்ற எல்லா எழுத்துக்களும் உயர்ந்-தவை - இவைதான் இன்று வேண்டப்படுபவை

என்று மேற்கோள் காட்டினார்.

நான் ஆய்வைச் செய்திருந்த மூர்த்தி மாஸ்டர் எங்கள் மண்ணில் ஆயுதங்களுக்கு இருக்கும் ஆளுமை பற்றி கதைகள் சுட்டி நிற்பதனை எடுத்துக் காட்டினார். இவர்களது சிறந்தான விசயங்களை நிகழ்ச்சித் தொகுப்பு பற்றிய கட்டுரையில் காணமுடியவில்லை.

"மன்றம்" சார்பில் கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. ஒழுங்காக நிகழ்ச்சிகள் திட்டமிடப்படாதமையால் ஏற்பட்ட நேரப் பற்றாக்குறையினால் கொடுக்கப்பட்ட சில நிமிடங்களில் ----

www.tamilarangam.net



"எமது எழுத்தாளர்களின் ஆக்கங்கள் சமூக இன ஒடுக்குமுறைகளை சமூக விஞ்ஞானப் பார்வை கொண்டு அணுகுவதுடன் எமது மக்களுக்கு சமூகப் பொறுப்பை உணர்த்துபவனவாகவும் அமையவேண்டும்" என்ற அடிப்படையில் உதிர்க்கப்பட்ட கருத்துக்கள் இங்கு (கட்டுரையில்) விளங்கிக்கொள்ள முடியாதனவாக திரிபடைந்துள்ளன.

தொடர்ந்து சுவிஸ்ஸில் இருந்து வெளிவரும் "மனிதம்" மாசிகையின் வெளியீட்டாளர்கள் ! இக்கால "இலக்கியம்" பற்றி சமூகம் : இலக்கியத்தின் மீது செலுத்தும் பார்வையையும் இலக்கியத்தை எப்படி எப்படியெல்லாம் கையாளுகிறது. இலக்கியம் சமூகத்திற்கு என்ன வகையில் பயன்படுகின்றது என்பதையும் சுருக்கமாகவும் முறையாகவும் சிலாகித்தனர்.

மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையில் இந்நூல் வெளியிடானது உண்மை ஆர்வலர்கள் பலரையும் உள்ளடக்கி "ஐரோப்பிய எழுத்தாளரின் இன்றைய பணி" பற்றிய ஒரு கலந்துரையாடலுடன் கூடிய சாதாரண நிகழ்ச்சியாக அமைந்திருந்தால் சிறப்பானதாக இருந்திருக்கும். மேலும் வெளியிடப்பட்ட நூல் பற்றியும் அதன் எழுத்தாளர்கள் பற்றியும் ஒரு அறிமுகத்தை, ஒரு மதிப்பீட்டை தந்திருக்கும். புதிய வாசகர்களை உருவாக்குவதற்குரிய சந்தர்ப்பத்தையும் கொடுத்திருக்கும்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் தாமதமாகியும் இருபத்தைந்து, முப்பது பேருடனேயே நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டமை எம்மவர்களின் கலை, இலக்கிய ஆர்வமின்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அதேவேளை நிகழ்ச்சி பற்றி பரவலாகத் தெரிவிக்கப் படாமையினால் உண்மையான ஆர்

www.tamilarangam.net



வலர்கள் கூட பங்கேற்கும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளனர்.

நிலைமை இப்படியிருக்க இவ் விழா பற்றி எழுதும் மு. கருணாநிதி "தமிழுக்கு விழா எடுத்தார்கள்" என்று கூறியிருப்பது ஜீரணிக்கமுடியாமல் உள்ளது. மேடைகளில் ஏறிநின்று கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன்தோன்றிய --- மொழி என்றோ, திக்கெட்டும் புகழ்பரப்பும் தமிழ்மொழி என்றோ வசனம் பேசி தமிழ் 'வளர்ப்பவர்களுக்கு' வேண்டுமானால் "சிலிலில் தமிழுக்கு விழா எடுத்தார்கள்" என்பது மேற்கோளாகப் பயன்படலாம். மாறாக எமது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இது உதவப்போவதில்லை என்பதையும் விட, அதன் வளர்ச்சிக்குத் தடைகளாக இருப்பவற்றை இனங்கண்டுகொள்ள முடியாமலும் போய்விடுகிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

எழுத்துச் சீர்திருத்தம், இறுகிய மரபுகளிலிருந்து மொழியை விடுவித்தல் போன்ற தேவைகளை எமது தமிழ்மொழியின் வளர்ச்சி வேண்டி நிற்கிறது. அண்மையில் பேர்லினில் (ஜேர்மனி) நடந்த சிறு இலக்கியச் சந்திப்பு ஒன்றில் பேராசிரியர் சிவசேகரம் "இறந்துகொண்டிருக்கும் ஒரு மொழியைப் பற்றி இங்கு பேச வருகிறேன்---" என்று கவலையுடன் உரையை ஆரம்பித்தது ஒவ்வொரு இலக்கிய கர்த்தாக்களினதும் சிந்தனையை எட்டவேண்டும்!

• ஆ-ர் ஜெ •

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






“மனிதம்” சிந்தனைக்கும், மேலையின் நாளம் வேலை செய்யவும் பக்கச் சார்பின்றியும் உண்மைகளை உறங்க வைக்காது வெளிவருகின்றது. இதுவும் ஓர் சிரமமான காரியம் தான். இதழ்கள் உலகறிய வெளிவரும் போது வெளியீட்டாளர்கள் நிம்மதி மூச்சு விடுவதும் கடினமே. எமது நாட்டைப் பொறுத்த வரை உறங்கும் உண்மைகளை “மனிதத்திற்கு” சாடுவது இலகுவில் பொருந்தாது.

ச. ஜெயராஜா, இலங்கை

ஒரு முற்போக்கு பத்திரிகையானது, பிற்போக்காளர்களையும் பிற்போக்கு, தனங்களையும் அடையாளம் காட்டுவதில் பின் நிற்பதில்லை. இந்த வகையில் மனிதம் தனது பங்கை செலுத்த வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். நடப்பது என்ன? உண்மை எது என்பது புரியாமல் குழம்பும் தமிழ் மக்களுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்த பல சவால்களையும் கடந்து “மனிதம்” உழைக்க வேண்டியிருக்கும்.

அருள். சூரிச்.

சங்க இலக்கியங்களில் வீரமும், மண்ணின் பெருமையும் மட்டுமே பேசப் படவில்லை. பிற மனித உணர்வுகளும் உள்ளடங்குவன. அகநானூறு வீரம் பற்றியதல்ல. கவிதை தொகையும் அவ்வாறே. அங்கு கூறப்படும் கருத்துக்களின் தன்மை அச் சமுதாயத்தை எவ்வாறு பிரதிபலித்தன என்பது பற்றி ஆசிரியரது நிலைப்பாடு சரியே. எனினும், சில முக்கிய தகவல்கள் விடப்படும் போது அது கருத்தை பலவீனப் படுத்தும்.

. சிவா, லண்டன் .

# தமிழ் மக்களின் போராட்ட வாழ்வில் மேலாதிக்கம் பெறும் முரண்பாடுகள்

தமிழ் மக்களின் போராட்டம் பற்றி பலதரப்பட்ட விளக்கங்கள் இன்று மக்கள் மத்தியில் நிலவுகின்றன. மக்கள் திரளின் பெரும் பகுதி சரியான நிலைப்பாட்டை அடையவில்லை அல்லது அந்தச் சரியான நிலைப்பாடு அவர்களுக்கு சுட்டிக்காட்டப்படவில்லை. இக்கட்டுரையானது தனது நிலைப்பாடு நூற்றுக்கு நூறு வீதம் சரியெனக் கூறுவதன் மூலம் இக்கட்டுரையில் குறிப்பிடும் கருத்தின் வளர்ச்சியைத் தடைசெய்யவில்லை. அதே நேரம் பலரது நிலைப்பாடு தவறானது என்று இங்கே உணர்த்தப்படுகின்றது. ஏன் எனில் இன்று தமிழ் மக்களின் வாழ்வு பற்றிய அவர்களது கண்ணோட்டமானது சொந்த ஆய்வுகளில் இருந்து செய்யப்படவில்லை. கருத்துக்களின் இயங்கியல் வளர்ச்சியின் அடிப்படையிலேயே இங்கு சொல்லப்படும் கருத்துக்களையும் வளர்த்துச் செல்ல, அதன் ஒரு பகுதியான இங்கு சொல்லப்படும் கருத்துக்கள் மீதான ஏனையோரது அபிப்பிராயங்களும், விமர்சனங்களும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி விஞ்ஞானரீதியான அணுகுமுறைகளுக்கு உட்படுத்தி மேற்கோள்களைப் பாவிப்பதை விடுத்து தவறான முறையில் மேற்கோள்களைப் பலர் பாவிக்கின்றனர். இங்கே கூறப்படும் கருத்துக்களுக்கு விமர்சனங்களை எழுதுவோர் அவ்வாறான அணுகுமுறையைத் தவிர்ப்பார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

சமுதாயத்தின் சகல நிகழ்வுகளையும் பரஸ்பர தொடர்புடைய, சிக்கல் நிறைந்த முரண்பாடுகளாக அணுகுவதே விஞ்ஞானரீதியானது, இந்த முரண்பாடுகளே சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடிப்படை. (முரண்பாடுகள் சமுதாயத்தில் மட்டுமல்ல சர்வவியாபகமாக, ஒவ்வொன்றின் இயக்கத்திலும் காணப்படுகின்றது.) இவ்வாறே இலங்கையில் வாழும் தமிழ் மக்களின்

www.tamilarangam.net



வாழ்வையும் அணுக வேண்டும். அது மட்டும் அல்ல இலங்கையில் வாழும் சகல மக்களின் வாழ்வும் இவ்வாறே, உலகத்தில் வாழும் கோடானுகோடி மக்களின் வாழ்வும் இவ்வாறே அணுகப்படவேண்டும். தமிழ் மக்களின் வாழ்வில் பலதரப்பட்ட முரண்பாடுகள் மிகவும் சிக்கலான வடிவில் நிலவுகின்றன. இந்த முரண்பாடுகளில் காலத்திற்குக் காலம் மேலாதிக்கம் பெறும் முரண்பாடுகள் மாற்றமடைகின்றன. இங்கு முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால் மேலாதிக்கம் பெற்ற முரண்பாடு தீர்க்கப்படாமலேயே இன்னும் ஒரு முரண்பாடு மேலாதிக்க நிலையை அடைவதை அவதானிக்கவேண்டும். அதாவது முன்னது தீர்க்கப்படாமல் இருக்கும்போதே முன்னதைவிட வளர்ச்சியடைந்து மேலாதிக்க நிலையை அடைவதை நாம் இங்கு கவனிக்கவேண்டும். முரண்பாடுகளை கண்டறிந்து அவற்றைத் தீர்க்காவிடில் இவ்வாறான நிகழ்ச்சிப் போக்கு சாத்தியமே.

தமிழ் மக்களுக்கும் சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாடு நீண்டகாலமாகக் காணப்பட்டபோதும் அது 1950 களிலேயே மேலாதிக்க நிலையையடைகின்றது. இருந்தபோதும் இந்த மேலாதிக்க நிலை தொடர்ந்து நீடித்ததாக உறுதியாக கூறமுடியாது. இருப்பினும் 1970 களின் பிற்பகுதியில் இருந்து 1986ம் ஆண்டு முற்பகுதிவரை தமிழ் மக்களின் மேலாதிக்கம் பெற்ற முரண்பாடாக தமிழ் மக்களுக்கும், சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாடே இருந்தது.

இதில் தமிழ் முதலாளிகளுக்கும், சிங்கள முதலாளிகளுக்கும் இடையிலான முரண்பாடு, தமிழ் அரசியல் வாதிகளுக்கும் - சிங்கள அரசியல் வாதிகளுக்கும் மிடையிலான முரண்பாடு, தமிழ் மத்தியதர வர்க்கத்திற்கும் - சிங்கள மத்தியதர வர்க்கத்திற்கும்மிடையிலான முரண்பாடு, தமிழ் தொழிலாளி வர்க்கத்திற்கும் - சிங்களத் தொழிலாளி வர்க்கத்திற்கும்மிடையிலான முரண்பாடு, இவ்வாறு பலவகைப்பட்ட பகுதி முரண்பாடுகள் தமிழ் மக்களுக்கும் - சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாட்டை மேலாதிக்கம் பெறவைத்தன. மேலே குறிப்பிட்ட எளிய வடிவத்தில்

www.tamilarangam.net



முரண்பாடுகள் இருந்ததாக கருதக்கூடாது. இவற்றின் சேர்க்கையே மிகவும் சிக்கல் நிறைந்ததாக இருந்தது. உதாரணத்திற்கு தமிழ் குட்டி முதலாளித்துவத்திற்கும் - சிங்களத் தொழிலாளர்வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு கூட காணப்பட்டது விளங்கப்படுத்துவதற்காகவே எளிய வடிவம் கையாளப்படுகின்றது. இதே கால கட்டத்தில் இலங்கைவாழ் மக்கள் மத்தியில் ஏனைய முரண்பாடுகள் காணப்பட்ட போதும் மேலாதிக்கம் பெற்ற முரண்பாடாக மேலே குறிப்பிட்ட முரண்பாடே இருந்தது. உதாரணத்திற்கு சாதியமுரண்பாடு, வர்க்கமுரண்பாடு, வல்லரசுகளுடனான முரண்பாடு,...... இவ்வாறு முரண்பாடுகள் காணப்பட்டபோதும் அவை மேலாதிக்கம் பெறமுடியவில்லை, இந்த மேலாதிக்கம் பெற்ற முரண்பாட்டுக்கு தமிழ் மக்கள் விரும்பிய தீர்வே 'தமிழ் ஈழம்' என்னும் தீர்வு. இந்தத்தீர்வுடன் உடன்பாட்டை தெரிவித்துக் கொள்ளமுடியாவிட்டாலும் நடந்தது அதுதான்! இந்தத்தீர்வுக்கு மாற்றான தீர்வை வைத்திருக்கமுடியாது என்ற கருத்தையும் இங்கே ஏற்க முடியாது. எது எப்படி இருப்பினும் முரண்பாடுகளை சரியாக அறிந்து கொண்டாலே சரியான தீர்வுக்குவரமுடியும்.

86ம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து புதிய முரண்பாடு மேலாதிக்கம் பெறும் நிலையை நோக்கி வளர்ச்சியடைகின்றது. அது பரந்துபட்ட தமிழ்மக்களின் ஜனநாயகத்திற்கும் - பாசிசத்திற்குமிடையிலான முரண்பாடே (இது வளர்ச்சியடைய தொடங்கும் போது அராஜகம் என மக்களால் அழைக்கப்பட்டது) 1986ம் ஆண்டு பிற்பகுதிக்கும் 1987ம் ஆண்டு யூலைக்குமிடைப்பட்ட காலத்தில் தமிழ்மக்களுக்கும் சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாடும், பரந்துபட்ட தமிழ் மக்களின் ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து மிகவும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இருப்பினும் பரந்துபட்ட தமிழ்மக்களின் ஜனநாயகத்திற்கும், பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்கம் பெறும் நிலையை நோக்கி வளர்ச்சியடைய முனைந்த போதும் 1987 யூலைக்குப்பின் மேலே சொன்ன இரண்டுமுரண்பாடுகளையும் விடப் புதிய முரண்பாடு ஒன்று மேலாதிக்கம் பெறுவதை நோக்கி வளர்ச்சியடை

www.tamilarangam.net



ந்து, மேலாதிக்கம் பெற்று, இன்று அது தீர்க்கப்படும் நிலையில் உள்ளது. அல்லாத புதிய முரண்பாடுகள் மேலாதிக்கத்தை நோக்கி வளர்ச்சியடைகின்றன.

1987 யூலைக்குப் பின்பு மேலாதிக்க நிலையை நோக்கி வளர்ச்சியடைய தொடங்கிய புதிய முரண்பாடு இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடாகும். இதே காலகட்டத்தில் இந்திய ஆக்கிரமிப்பாளர்கட்கும் - சிங்களப் பேரினவாத அரசுக்கும், இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் - சிங்கள மக்களுக்கும் இடையில் கூட முரண்பாடுகள் நிலவியது. சகல முரண்பாடுகளும் ஒரே அளவில், ஒரே பண்பில் நிலவியது என்று இக்கட்டுரை குறிப்பிடவில்லை. இந்த காலகட்டத்தில் தமிழ் மக்களிற்கும் - சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்கம் பெற்ற நிலையில் இருந்து பின்னுக்கு தள்ளப்படுகின்றது. ஆனால் தீர்க்கப்படவில்லை.

1987 யூலைக்குப் பின்பு தமிழ் மக்களுக்கும் - இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையிலான முரண்பாடும், பரந்து பட்ட தமிழ் மக்களின் ஜனநாயகத்திற்கும், பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய, மிகவும் சிக்கலான முறையில் காணப்பட்டாலும் மேலாதிக்கம் பெற்றதாக தமிழ் மக்களுக்கும் - இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையிலான முரண்பாடே காணப்பட்டது. இதே காலகட்டத்தில் கூட ஏனைய முரண்பாடுகள் இல்லாது ஒழிந்து விடவில்லை. மேலாதிக்க நிலையினை மேலே கட்டுரை குறிப்பிட்ட முரண்பாடானது கைப்பற்றிக் கொண்டது. அதே காலகட்டத்தில் சிங்கள மக்கள்வாழ்விலும் புதிய முரண்பாடுகள் வளர்ச்சியடையத் தொடங்கியதும் தமக்கிடையிலான மோதலில் ஒரு குறிப்பிட்ட முரண்பாடு மேலாதிக்க நிலையை அடைந்ததையும் அவதானிக்கமுடியும். அவற்றில் மேலாதிக்க நிலையை நோக்கி வளர்ச்சியடைந்த முரண்பாடுகளில் சிங்கள அரசுக்கும் சிங்களப் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, சிங்களப் பரந்து பட்ட மக்களின் ஜனநாயகத்திற்கும், பாசிசத்திற்கும் - இடையிலான முரண்பாடு, சிங்கள மக்களுக்கும் - இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையிலான முரண்பாடு என்பன குறிப்பிடத்தக்கன. இந்த முரண்பாடுகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து மிகவும்

www.tamilarangam.net



சிக்கல் நிலையில் காணப்பட்டாலும் பரந்துபட்ட சிங்கள மக்களின் ஜனநாயகத்திற்கும், பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடே மேலாதிக்கம் பெற்றதாகக் காணப்படுகின்றது. இன்னும் இந்த நிலை நீடிக்கின்றது. மாறாக தமிழ்ப் பகுதிகளில் இன்று இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும்-தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டைவிட வேறு இரு முரண்பாடுகள் மேலாதிக்கம் பெறக்கூடிய வாய்ப்புகள் இருப்பதை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. ஒன்று பரந்துபட்ட தமிழ்மக்களின் ஜனநாயகத்திற்கும் - பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடு மற்றது தமிழ்மக்களுக்கும் சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலானமுரண்பாடு. இவற்றில் எது மேலாதிக்கம் பெற இருக்கிறது என்பதை சிறிது காலம் பொறுத்தே தீர்மானிக்க முடியும்.
புதிய முரண்பாடு ஒன்று மேலாதிக்க நிலைக்கு வருகிறது. மாறாக
மேலாதிக்கம் பெற்ற ஒரு முரண்பாடு தீர்க்கப்படும்போது, புதிய முரண்பாடு ஒன்று மேலாதிக்க நிலைக்கு வரும்போது முன்பு மேலாதிக்கம் பெற்ற முரண்பாடு தீர்க்கப்பட்டே இருக்கும் என்று கருதக்கூடாது. தமிழ்மக்களுக்கும் சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான மேலாதிக்கம் பெற்ற முரண்பாடு தீர்க்கப்படாமல் இருக்கும்போதே புதிய முரண்பாடுகள் மேலாதிக்க நிலையை நோக்கி வளர்ச்சியடைந்தன. அதில் ஒரு முரண்பாடு மேலாதிக்க நிலையை அடைந்தது. அதேபோல் இந்த முரண்பாடு தீர்க்கப்படாமல் இருக்கும்போதே எதிர்காலத்திலும் புதிய முரண்பாடு ஒன்று மேலாதிக்க நிலைக்கு வரமுடியும். இந்த முரண்பாடுகள் அகநிலை, புறநிலை சக்திகளின் தாக்கத்தினால் மேலாதிக்க நிலையை பெறுதல் அல்லது இழத்தல் நிகழ்கின்றது. இன்று பரந்துபட்ட தமிழ்மக்களுக்கும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையிலான முரண்பாட்டில் அகநிலை, புறநிலை சக்திகளில் ஏற்படும் மாற்றம் ஏனைய முரண்பாடுகளை மேலாதிக்க நிலைக்கு கொண்டு வருகின்றது.

மேலே குறிப்பிட்ட படி பரந்துபட்ட தமிழ்மக்களின் ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்கம் பெற்றாலும், தமிழ் மக்களுக்கும் சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாடு மறையாமல் (தீர்க்கப்படாமல்) இருக்கும். இந்த நிலையில் எமது போராட்டம் பிரதான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாக மேலாதிக்கம் பெற்ற முரண்பாட்டை தீர்பதற்காகவே இருக்கும். இந்த மேலாதிக்கம் பெற்ற முரண்பாட்டை தீர்பது உடனடிக்குறிக்கோளாக இருந்தபோதும், ஏனைய மேலாதிக்க நிலையை நோக்கி உடனடியாக வளர்ச்சியடையக்கூடிய முரண்பாடுகளை தீர்ப்பதற்காகவும் போராடவேண்டும். இல்லாவிட்டால் இன்று மேலாதிக்க நிலையை இழந்த முரண்பாடு, மீண்டும் மேலாதிக்க நிலையை அடைவதை தவிர்க்கமுடியாது. எதிர்காலத்தில் தமிழ்மக்களின் ஜனநாயகத்திற்கும்-பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்கம் பெற்றால்! இலங்கை முழுவதும் ஒரே முரண்பாடு மேலாதிக்க நிலையில் இருப்பது போல் காணப்படும் அந்தமுரண்பாடானது பரந்துபட்ட தமிழ்,சிங்கள மக்களின் ஜனநாயகத்திற்கும்-பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடே ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த முரண்பாட்டைத் தீர்பதற்கு பொதுவான திட்டம் வைக்கக் கூடிய வாய்புகள் இருந்தபோதும் அதை அடைவது சிரமமே. அதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் தேவை. ஏனெனில் தமிழ்மக்களுக்கும், சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படாமல் உள்ளது. இரண்டுபகுதி மக்களின் ஜனநாயகத்துடன் முரண்படும் பாசிச சக்திகள் ஆயினும், பண்பில் வேறு வேறாக இருக்கின்றனர்.(அதைவிட உண்மையான தமிழ்,சிங்கள மக்களுக்கும், போராடும் புரட்சிகர இயக்கங்களுக்கும் இடையில் தொடர்புகள் நம்பிக்கைதரக்கூடிய அளவு இல்லை) மேலாதிக்கம் பெற்ற முரண்பாட்டை தீர்ப்பதற்கு சரியான ஒரு வேலைத்திட்டம் வைக்கும் போதே தமிழ்மக்களுக்கும் சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாட்டை மேலாதிக்கம் பெறாமல் கட்டுப்படுத்தி நீண்டகால நோக்கில் அதை தீர்கமுடியும். இந்த நிகழ்ச்சிகளின் போதே தமிழ் மக்களுக்காக போராடும் புரட்சியாளர்களும், சிங்கள மக்களுக்காக போராடும் புரட்சியாளர்களும் ஐக்கியப்படுவதற்கான வாய்புகள் உருவாகும். ஆனால் இது இலகுவான காரியம் அல்ல.

இங்கு ஒரு முக்கியமான விடயத்தை விட்டுவிட்டதாக சிலர் எண்ணக்கூடும். அதாவது பரந்துபட்ட உழைக்கும் மக்களுக்கும் சுரண்டுபவர்களுக்கும் இடையிலான முரண்பாடே அது. இந்த முரண்பாடு பலதரப்பட்ட வடி

www.tamilarangam.net



வத்தில் காணப்பட்டாலும் ஒரு மேலாதிக்கம் பெற்ற முரண்பாடாகவோ அன்றி மேலே குறிப்பிட்ட முரண்பாடுகளைப் போல மேலாதிக்கம் பெறும் நிலையை நோக்கி வளர்ச்சியடையவில்லை. இந்த முரண்பாட்டை மேலாதிக்க நிலையை நோக்கி உயர்த்துவதாக இருந்தால் கூட மேலே உள்ள முரண்பாடுகளை தீர்க்க வேண்டும். மேலே குறிப்பிட்ட முரண்பாடுகள் ஒன்றுடன் ஒன்று 'போட்டி போட்டுக்கொண்டு' மேலாதிக்கம் பெற முடியவில்லை. ஆகவே ஏனைய இன்று மேலாதிக்கம் பெற்ற முரண்பாடுகளை தீர்பதன் மூலமே உழைக்கும் மக்களுக்கும்-சுரண்டுபவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டை மேலாதிக்க நிலைக்கு கொண்டு வர முடியும். மேலும் இதன் மூலம் உழைக்கும் மக்களுக்கும்-சுரண்டுபவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டை தீர்க்க முடியும். இதே போல் மக்கள் மத்தியில் இன்றும் எத்தனையோ முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இனி தமிழ் மக்களின் உன்னதமான வாழ்வுக்கான தீர்வை இந்த முரண்பாடுகளின் அடிப்படையில் தான் தேட வேண்டும். எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கும் – சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு மேலாதிக்கம் பெற்றால் வைக்கப்படும் தீர்வும், பாரதுபட்ட தமிழ் மக்களுக்கும்- பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்கம் பெற்றால் வைக்கப்படும் தீர்வும் மாறுபட்டும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவும் காணப்படும். இங்கு குறிப்பிடப்படும் தீர்வினையே கட்டுரை இறுதி இலட்சியமாக கொள்வதாகக் குழப்பிக் கொள்ளக்கூடாது. எது மேலாதிக்கம் பெற்றாலும் இரண்டு முரண்பாடுகளுக்கும் இடையில் உள்ள சிக்கலான உறவைப் புரிந்து கொண்டு உரிய திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். அதில் மேலாதிக்கம் பெற்ற முரண்பாட்டுக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டு தீர்வு தேடப்பட வேண்டும்.

அந்த அடிப்படையில் பாரதுபட்ட தமிழ் மக்களிற்கும்-பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்பதற்கு பரம்பரை ஜனநாயகத்திற்காக தமிழ் மக்கள் போராடுவதைத் தீர்வாகவும் தமிழ் மக்களிற்கும் சிங்களப் பேரினவாதத்திற்கு இடையிலான முரண்பாட்டை தீர்பதற்கு முதன்மையான ஒன்றாக

www.tamilarangam.net



தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் வாழும் மக்களின் பாதுகாப்புக்கு போராடுவதையுமே தவிர்க்க முடியாத பகுதித் தீர்வாக இன்று தமிழ்ப் பகுதியில் வாழும் புரட்சியாளர்களால் முன்வைக்க முடியும். இதனைத் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்திற்கான பாதுகாப்பிற்கான போராட்டம் என்றோ அல்லது தமிழீழப் போராட்டம் என்றோ அர்த்தப்படுத்தக்கூடாது. சில சந்தர்ப்பங்களில் பாரம்பரிய பிரதேசத்தின் பாதுகாப்பு என்பது அங்கு வாழும் மக்களின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டால் உறுதியுடன் அதற்காகப் போரிடவும் தயங்கக்கூடாது.
[உ+ம்: வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களை பிரிப்பதற்காக செய்யப்படும் திட்டமிட்ட குடியேற்றங்களை எதிர்த்து போராடுவது] இந்தச் சந்தர்ப்பத்தில் 'புரட்சிகர ஜனநாயகம்' என்ற சொல் எதைக் குறிக்கிறது என்பதை நினைக்க வேண்டும். பாசிசத்திற்கு எதிராக முதலாளித்துவ ஜனநாயகத்தை கோரும் சக்திகளில் இருந்து வேறுபட்டு, பாசிசம் எந்த அடிப்படைகளில் இருந்து எழுந்ததோ அந்த அடிப்படைகளையும் அதற்குரிய அமைப்பு முறைகளையும் தகர்ப்பதையே புரட்சிகர ஜனநாயகம் என்று இங்கு குறிப்பிடப்படுகின்றது. மாறாக முதலாளித்துவ ஜனநாயகசக்திகள் அல்லது சீர்திருத்தவாதிகள், முதலாளித்துவ ஜனநாயகத்தை அல்லது இதற்கு முன்பு நிலவிய ஜனநாயக உரிமைகளை பெறுவதை தீர்வாக முன்வைக்கிறார்கள். இது பரந்துபட்ட மக்களின் ஜனநாயகத்திற்கும், பாசிசத்திற்கும் இடையில் உள்ள முரண்பாட்டை தீர்ப்பதற்குப் பயன்படாது. மாறாக இந்த முரண்பாட்டை தீர்ப்பதற்கு பாசிசம் எந்த அமைப்பு முறையில் இருந்து உருவானதோ, அதன் அடிப்படைகள் எவையோ அவற்றைத் தகர்த்து புதியவடிவத்தைத் தீர்மானிப்பதையே இங்கு புரட்சிகர ஜனநாயகம் எனப்படுகின்றது. இந்தப் போராட்டத்தின் போது இடது தீவிரவாத நிலைப்பாட்டைத் தவிர்த்து ஜனநாயக சக்திகளுடன் விமர்சனரீதியான ஐக்கியம் பேணப்படல் வேண்டும். இதே வேளை புரட்சிகர ஜனநாயகத்திற்காக போராடுவதையே தென் பகுதியில் வாழும் புரட்சியாளர்கள் கூட வைக்கக்கூடிய தீர்வாக உள்ளது. இரண்டு பக்கத்தில் வாழும் புரட்சிகர சக்திகளுக்கும், புரட்சிகர ஜனநாயகத்திற்கான ஒரே தீர்வு முன்வைக்கப்படும் போதும் அவர்கள் ஐக்கியப்படமுடியாமல்

www.tamilarangam.net



உள்ளது. ஏன் எனில் முரண்பாடு ஒன்றாக இருந்த போதும் முரண்படும்சக்திகளில் உள்ளமாற்றும், மேலும் தமிழ்மக்களுக்கும் - சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாடு தீர்க்கப்படாமை போன்ற முக்கிய காரணங்கள் ஆகும். ஆகவே ஆரம்ப காலங்களில் இரண்டு பகுதிப் புரட்சியாளர்களும், மக்களும் தனித்தனியே போராட நிர்ப்பந்திக்கப் படுகின்றார்கள். இந்தப் போராட்டத்தின் போதே புரட்சியாளர்கள் தமிழ்மக்களுக்கும், சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்க்கப் பாடுபடவேண்டும். அதனைத் தீர்ப்பதற்கு, புரட்சிகர ஜனநாயகத்திற்கான போராட்டத்தின், தமிழ் மக்களுக்கும்-சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையிலான முரண்பாட்டுடன், சகல பகுதி முரண்பாடுகளையும் (அல்லது சகல காரணிகளையும்) கண்டறிந்து அவற்றிற்கு எதிராகப் போராடவேண்டும். இந்தப் போராட்டமே இலங்கைவாழ் மக்களின் ஐக்கியத்திற்கான போராட்டம் ஆகும்.

இதற்கான கடமைகளாக தமிழ்ப்பகுதியில் வாழும் புரட்சியாளர்கள் இரண்டு முரண்பாடுகளை தீர்ப்பதற்காகப் போராடும் காலகட்டத்தில் உழைக்கும் மக்களுக்கும் - சுரண்டலுக்கும் இடையிலான முரண்பாட்டையும், தேசிய வெறிக்கும், தேசியவாதத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும் மக்களுக்கு விளங்கப் படுத்தி உணர்த்த வேண்டும். தென்பகுதி மக்களுடன் ஐக்கியப்படுவதற்காக சகல தேசிய வெறிச்சக்திகளையும் எதிர்த்துப் போராடவேண்டும். அதேபோல் தென் பகுதிப் புரட்சியாளர்கள் தங்களது புரட்சிகர ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் போது சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடுவதும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் வாழும் மக்களின் பாதுகாப்புக்காக போராடுவதை சரி என சிங்கள மக்கள் மத்தியில் உணர்த்துவதும் சுயநிர்ணய உரிமை உடைய ஒரு தேசிய இனம் என்ற கருத்தைத் தமிழ்மக்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து ஒரு கருத்தியலை வளர்ப்பதற்காகப் போராடுவதும் அவசியம் ஆகும். இந்தக் கடமைகளை சரிவர இரண்டுபக்க புரட்சியாளர்களும் செய்யும்போதே ஐக்கியம் சாத்தியம்.

www.tamilarangam.net



இங்கே முஸ்லீம் மக்களையும், மலையக மக்களையும் பற்றிய தீர்வுகள் எதையும் கூற முடியவில்லை. முரண்பாடுகளை அணுகுவதற்கு மேலே குறிப்பிட்ட முறை பிரயோகிப்பது சரி எனினும் மேலே குறிப்பிட்ட மக்கள் சமூகங்களின் வாழ்வில் காணப்படும் முரண்பாடுகள் தெளிவாகத் தெரியாததாலேயே தவிர்க்கப்படுகின்றது. முஸ்லீம் மக்களையும், மலையமக்களையும் தமிழ் மொழியை பேசுகிறார்கள் என்ற காரணத்திற்காக தமிழ்த் தேசிய இனம் என்று வரையறுக்க தற்போது போதிய ஆய்வுகள் இல்லை. இருப்பினும் தமிழ் தேசிய வெறிக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடு, முஸ்லீம் அடிப்படைவாத வெறிக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முஸ்லீம் மக்களுக்கு மத்தியில் உள்ள பாசிசக் குழுக்களுக்கும் முஸ்லீம் மக்களும் இடையிலான முரண்பாடு என பலவகைப்பட்ட முரண்பாடுகள் காணப்படுகின்றன. தற்போது தமிழ் தேசிய வெறிக்கும் முஸ்லீம் அடிப்படைவாதத்திற்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்க நிலைக்கு வந்து தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையிலான முரண்பாடாக வளர்ச்சியடையக்கூடிய கட்டத்தில் இருக்கின்றது. இருப்பினும் இம்முடிவு உறுதியானது அல்ல. அதேபோல் மலையமக்கள் வாழ்விலும் பலதரப்பட்ட முரண்பாடுகள் உள்ளன. இந்த முரண்பாடுகளையும் அவற்றின் சிக்கலான தன்மைகளையும் புரிந்து கொண்டே தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும்.

இனி பலதரப்பட்ட குழுக்கள், பலதரப்பட்ட தனிநபர்கள் வைக்கும் தீர்வுகளைக் கவனிப்போம். இதில் அகில இலங்கைக்கான புரட்சி பற்றி [புதிய ஜனநாயகப் புரட்சி, சோஸலிசப் புரட்சி இரண்டும்] பேசுபவர்கள், 'உலகப் புரட்சியின்' ஒரு அங்கமாக தமிழர் பிரச்சனையைப் பார்ப்பவர்கள் தமிழர்களுக்கு நாடு வேணும் எனப் போராடுபவர்கள், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை கொடுப்பவர்கள் இப்படிப் பலதரப்பட்ட நிலைப்பாட்டுடன் பலர் இருக்கிறார்கள் இதில் சிலர் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் வாழும் மக்களின் பாதுகாப்புக்காகப் போராடுவதையும் தேசிய வெறி என்கின்றனர். இப்படியானவர்கள் பலர் ஈயடிக்கும் தத்துவத்தினை தமது தத்துவமாகக் கொண்டுள்ளனர். மார்க்சியத்திற்கும்

www.tamilarangam.net



இவர்களுடைய ஈ.யடிக்கும் தத்துவத்திற்கும் சம்பந்தம் இல்லை. இதில் இன்னும் ஒரு பகுதியினருக்கு சிங்கள மக்கள்மேல் திடீர் "அன்பு" பிறக்கின்றது. இதன் அடுத்த வகையினர் சிங்கள மக்களின் இரத்தம் குடித்தாவது தமிழர்கள் வாழ வேண்டும் என்று நினைக்கின்றனர். இது தேசிய வெறியினை ஏந்தியுள்ள பாசிஸ்ட்டுக்கள். இந்த மூன்று பிரிவினரதும் குறிப்பாக மூன்றாவது பிரிவினரின் தேசிய வெறிக்கு எதிராக அவர்களைத் தனிமைப்படுத்தி போராட வேண்டியது இன்றைய கடமை. இதற்காக ஏனைய இரண்டு பிரிவினர்களுடனும் ஐக்கியப்பட வேண்டிய சூழ்நிலையில் ஐக்கியப்பட வேண்டும். இந்த ஐக்கியத்தின் போது குறிப்பான நிலைமையையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். 'ஈ.யடிக்கும் தத்துவத்தை' வைத்திருப்பவர்களில் பலர் நேர்மையானவர்களாக இருக்கிறார்கள். இருப்பினும் தீர்வுக்கு லெனின், ஸ்டாலின், ரொஸ்கி, மாவோ ஆகியோர் ஏதோ ஒரு பிரச்சனைக்கு ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட மேற்கோள்களை முன்வைக்கிறார்கள். மேலே குறிப்பிட்ட மார்க்சியர்களின் கருத்துக்களை ஆய்வுக்குட்படுத்தி சரியான முறையில் எமது மக்களின் வாழ்நிலைக்கு பொருத்த வளர்த்தெடுக்க வேண்டும் என்றால் அதை மறுக்கிறார்கள். ஏன் என்றால், தத்துவார்த்த துறைக்கு கடின உழைப்பை செலவிட விருப்பம் இல்லாத தவறான போக்கே இது. இப்படிப்பட்ட போராளிகள் தென் இலங்கையிலும் ஏன் தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும், உலகம் பூராவிலும் இருக்கிறார்கள். அடுத்த பிரிவினரான, சிங்கள மக்கள் மீதில் 'திடீர் அன்பு' காட்ட நினைப்பவர்களில் பெரும்பான்மையினர் தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட இயக்கங்களில் போராடிய அல்லது ஆதரவு கொடுத்தவர்களே! வடபகுதியில் பாசிசச் சூழல் வந்தவுடன் [அதாவது பரந்துபட்ட தமிழ் மக்களின் ஜனநாயகத்திற்கும்-பாசிசத்திற்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்க நிலையை நோக்கி வளர்ச்சியடைந்ததும்] இவர்கள் பாசிசத்தை முறியடிக்கவோ அன்றி இந்திய ஆக்கிரமிப்பு நிகழ்ந்தவுடன் அதனை எதிர்த்தோ போராடுவதற்கு உறுதியற்ற நிலையில் 'வர்க்கப் போராட்டம்'

www.tamilarangam.net



'முழு இலங்கைக்குமான புரட்சி' என்னும் கோசங்களுக்குள் தம்மை மறைந்துக் கொண்டுள்ளார்கள். சிலர் 'உலகப்புரட்சி' என்ற கோசத்தினை முன்வைப்பதன் மூலம் உயர்ந்த மட்டத்தில் தமது சந்தர்ப்பவாதத்தை மறைத்துக் கொண்டுள்ளனர். இந்த சந்தர்ப்பவாதிகளின் கருத்துகளுக்கு எதிராகப் போராடுவது இன்றைய அடிப்படைக்கடமையாக இருக்கின்றது. இவர்களது இன்றைய 'வர்க்கப்போராட்டம்', 'இலங்கைமுழுவதற்குமான புரட்சி', 'உலகப்புரட்சி' போன்ற கோசங்கள் யதார்த்த நிலைமைகளை ஆராய்ந்து முன்வைக்கப் படுமாயின் அது சரியே. மாறாக சந்தர்ப்பவாதமாக இன்றைய நிலையை முகம் கொடுக்க ஆற்றல் இல்லாமல் தொடர்ந்து 'புரட்சி பற்றி கதைப்பதற்காக' முன்வைத்தால் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். இவர்களைப் போன்ற சந்தர்ப்ப வாதிகளை காப்பாற்றுவது லெனின், மார்க்ஸ், ஸ்டாலின், ஏங்கல்ஸ், மாவோ போன்றோர்களின் மேற்கோள்களே! இதன் மூலம் அவர்களின் கருத்துக்களையே திரிவு படுத்துகிறார்கள். இப்படியான சந்தர்ப்பவாதிகளுக்கு மரபுவழி இடதுசாரிக்கட்சிகள் நல்ல புகலிடமாக உள்ளது. கடினமான புரட்சிகளை மரபுவழி இடதுசாரிகளால் சாதிக்கமுடியாது. இப்போது அவர்கள் வெள்ளிவிழா, வைரவிழாக்களைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலே கூறிய முரண்பாடுகளைப் போல் இன்று உலக அளவில் மேலாதிக்கம் பெற்ற முரண்பாடாக இருப்பது ஒடுக்குபவனுக்கும்-ஒடுக்கப்படுபவனுக்கும் இடையிலான முரண்பாடாக இருந்த போதும் இது ஒவ்வொரு குறிப்பான நிலைமையிலும், அதில் முரண்படும் சக்திகள், அளவிலும், பண்பிலும் வேறுபடுகின்றன. ஆகவே அந்த ஒடுக்குபவனுக்கும்-ஒடுக்கப்படுபவனுக்கும் இடையிலான முரண்பாடு பொதுவாக மேலாதிக்கம் பெற்ற முரண்பாடாக இருந்த போதும் ஒவ்வொரு குறிப்பான வடிவத்தைப் பெறுகின்றது. அதனைத் தீர்க்கும் முறைகளும் வேறுபடுகின்றன. இந்த அடிப்படையிலேயே தேசிய - சர்வதேசிய முரண்பாடுகளை வரையறுப்பது சரியான அணுகுமுறையாகும்.

— குணபாவன் -

பி.கு: இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள் பற்றிய
தகவல்கள் குமாரி ஜெயவர்த்தனாவின் புத்தகங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



Nur für Freundkreis

இதுவரை நெருக்கடியாக இருந்துவரும் அச்சுச் செலவின் தாக்கத்தால் தவிர்க்க முடியாதபடி மனிதம் 3 Sfr ஆக விலை உயர்த்தப்பட்டுள்ளது.

தனிப் பிரதி - 3 Sfr

புதிய சந்தா விபரம் சுவிஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு:

1 வருடம் : 20 Sfr

6 மாதம் : 10 Sfr

(தபால் செலவு உட்பட)

ஏற்கனவே சந்தா செலுத்தியவர்களின் விலையில் மாற்றமில்லை. சந்தாக்காரர்களாக விரும்புபவர்கள் "மனிதம்" முகவரியுடன் தொடர்பு கொண்டு பணம் செலுத்துவதற்கான விபரங்களை அறிந்து கொள்ளவும்.

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்!

• ஆ-ர் குழு •

தொடர்புகட்கு :-

"Manitham"
Zentrum 5 (Z5)
Unterstützungsverein
Postfach 8542
3001 Bern
Switzerland

இரு மாதம் ஓர் இதழ்

(--- 37 ம் பக்க தொடர்ச்சி)

யும் விடுவிக்கப் போராடினான். இறுதியில் அதற்காகவே சாகிறான்... வரலாறு இப்படி போய்க் கொண்டிருந்தது. ஒடு-
க்கப்பட்டவர்கள் பற்றிய அடிமைச் சமுதாய வரலாற்றை மகேசன் முடித்து விட்டு காந்தனை நோக்கி கேள்விகளை எதிர்பார்த்தபடி புன்னகைத்தான்.

×.×.×

- எஸ். குமாரசாமி -

www.tamilarangam.net

**உரிமை விடியல்**

இயற்கையைத் தொலைத்த
எங்கள் மண்ணில்
இன்னமும் ......
வானம் உமிழும்
இடியிலும் மின்னலிலும்
கவச வாகனங்களையும்
காக்கிச் சட்டைகளையும்
இப்போ காண்பதில்லைத்தான் !
ஆனாலும்
பயங்கரம் உறங்கும்
மௌன இரவில்
காலடிச் சத்தமும்
நாயின் உறுமலும்
இப்போதும்
இதயத்தில் இறங்கும் !
நிலவின் வார்ப்பில்
மரத்தின் நிழலும்
துவக்குடன் அசையும்.
யுத்தத்தின் நீண்ட இருள்
மெல்ல வெளுத்த
இருக்கில் பொழுது !
சூரியன் எழும்ப மறுப்பதால்
கிழக்கைத் தேடி
பிரளும் விழிகளுடன்
மனிதர்கள்
இன்னமும்---- இன்னமும்---